# குற்ற விசாரணை முறைச்சட்டம்
# CRIMINAL PROCEDURE CODE

## அத்தியாயம் - 1

***முன்னுரை***

இந்த சட்டம் ஜனவரி மாதம் 25-ஆம் தேதி 1974—ஆம் ஆண்டு இந்திய பாராளுமன்றத்தில் புதுப்பிக்கப்பட்டது.

1. ஒப்புக் கொள்ளக்கூடிய கொள்கையின் அடிப்படையில் குற்றவாளிக்கு நியாயம் வழங்கப்படவேண்டும்
2. சமுதாயத்திற்கு அல்லது தனிப்பட்ட நபருக்கு தீங்கு, இடையூறு ஏற்படாத வகையில் புலன் விசாரணை காலதாமதமின்றி செய்யப்படவேண்டும்.
3. அவ்வாறன விசாரணை முறை சாதாரண எளிய மக்களுக்கு பயனடையக் கூடிய வகையில் நியாயமாகவும், இலகுவாகவும் திருத்தப்பட வேண்டும்

## பிரிவு - 1

இந்திய குற்றவிசாரணை முறைச்சட்டம் ஜம்மு-காஷ்மீர், நாகாலாந்து ஆகிய மாநிலங்களுக்கும் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளைத் தவிர இந்தியா முழுவதும் இதற்கு அதிகார வரம்பு உண்டு.

## பிரிவு - 2

சட்டப்படி செய்யவேண்டிய ஒரு செயலை செய்யாமல் இருந்தாலும் சட்டப்படி செய்யக்கூடாத ஒரு செயலை செய்தாலும் அது குற்றமாகும். அந்த செயல் காலத்திற்கு ஏற்றவாறு குற்றமாகக் கருதப்படும்.

***உதாரணம்:***

ஒரு கிராமநிர்வாக அதிகாரி அல்லது ஒரு கிராம பஞ்சாயத்து தலைவர் தங்கள் கிராமத்து எல்லைக்குள் திடீரென்று ஏற்பட்ட இயற்கைக்கு மாறான ஒரு இறப்பைப் பற்றியோ அல்லது திருட்டு, கொள்ளை, கூட்டுக்கொள்ளை அல்லது ஒரு வீட்டில் ஒளிந்து கொண்டிருக்கும் குற்றவாளிகளைப் பற்றி தகவல் கிடைத்ததும் மேற்படி தகவலை அருகில் உள்ள காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார். அப்படி தகவல் கொடுக்க தவறுவாரேயானால் அவர் பிரிவு 176 IPC-யின் படி தண்டிக்கப்படுவார்.

1871-ஆம் ஆண்டு பிறப்பித்த பிரிவு எண் 20-ன்படி கால்நடைகள் அத்துமீறிய வளர்ப்பில் சொல்லப்பட்ட விளக்கங்களும், இந்த பிரிவின்படி குற்றமாகக் கருதப்படும்,

***குற்றங்கள் :***

குற்றங்கள் என்பவை இரண்டு வகைப்படும்

1. பிடிக்கக்கூடிய குற்றம்
2. பிடிக்கக் கூடாத குற்றம்

***விளக்கம் :***

***1. பிடிக்கக்கூடிய குற்றம் :*** ஒரு போலீஸ் அதிகாரி பிடியாணை இல்லாமல் ஒரு நபரை கைது செய்வாரேயானால் அந்த நபர் செய்திருக்கிற குற்றம் 'பிடிக்கக்கூடிய குற்றம்' ஆகும்.

2. ***பிடிக்கக்கூடாத குற்றம் :*** ஒரு போலீஸ் அதிகாரி ஒரு நபரை பிடியாணை இல்லாமல் கைதுசெய்ய முடியாமல் போனால் அவர் செய்திருக்கிற குற்றம் 'பிடிக்கக்கூடாத குற்றம்' ஆகும்.

**(அ) பிணையில் விடும் குற்றம் :**

'பிணையில் விடும் குற்றம்' என்பது முதலாவது இணைப்பு பட்டியலில் பிணையில் (ஜாமின்) விடக்கூடியதாக காட்டப்பட்டுள்ள அல்லது அவ்வப்போது நடைமுறையில் இருந்தும் வேறு எந்த சட்டத்திலும் பிணையில் விடும் குற்றமாக ஆக்கப்பட்டுள்ள எந்த குற்றத்தையும் குறிக்கும். மற்ற எந்த குற்றமும் பிணையில் விடப்படாத குற்றம் எனப்படும்.

**(ஆ) குற்றச்சாட்டு:**

ஒரு குற்றச்சாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புகள் இருக்கும்போது அந்த தலைப்புகளில் உள்ள எதனையும் அந்த குற்றச்சாட்டு உள்ளடக்கும்.

**(இ) புலனாய்வு:**

புலனாய்வு என்பது இந்த சட்டத்தின்படி சாட்சியம் திரட்டுவதற்காக ஒரு காவல் அலுவலர் அல்லது அதன் பொருட்டு ஒரு குற்றவியல் நடுவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள வேறு யாராவது எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் குறிக்கும்.

**(ஈ) நீதி நடவடிக்கை:**

நீதி நடவடிக்கை என்பது சத்திய பிரமாணத்தின் மீது சட்டபூர்வமாக சாட்சியம் பதிவு செய்யத் தக்கதான நடவடிக்கை எதனையும் குறிக்கும்.

**(உ) வட்டார வரம்பு:**

ஒரு நீதிமன்றம் அல்லது ஒரு குற்றவியல்நடுவர் அதிகாரம் செலுத்தத்தக்க வட்டாரத்தின் வரம்பினைக் குறிக்கும்.

**(ஊ) குற்றம் :**

குற்றம் என்பது எந்த ஒரு சட்டத்தின் படியும் தண்டிக்கத்தக்க செயலை அல்லது செய்யாது விடுவதை குறிக்கும் 1871-ஆம் ஆண்டின் கால்நடைகள் அத்துமீறல் சட்டத்தின் 20-ஆவது பிரிவின்படி அளிக்கத்தக்க முறையீட்டையும் இது உள்ளடக்கும்

**(எ) காவல் நிலையப்பொறுப்பில் உள்ள அலுவலர் :**

இந்த சொல் ஒரு காவல் நிலையபொறுப்பில் உள்ள அலுவலர் அந்த நிலையத்தில் இல்லாதபோது அல்லது மற்ற காரணத்தினால் அந்த நிலையத்தில் பணியாற்ற இயலாத போதும் அவருக்கு அடுத்த நிலையில் அந்த நிலையத்தில் பணியாற்றும் காவலர் நிலைக்கு மேல் உயர்ந்த நிலையில் உள்ள ஒருவரையும் அல்லது மாநில அரசு குறிப்பிட்டுள்ளவரும் அங்கே இருப்பவருமான வேறு காவல் அலுவலைரையும் குறிக்கும்.

**(ஏ) காவல் அறிக்கை:**

காவல் அறிக்கை என்பது இந்த சட்டத்தின் 173-வது பிரிவு கிளைப்பிரிவு (2)-ல் கூறியபடி ஒரு குற்றவியல்நடுவருக்கு ஒரு காவல் அலுவலரால் அனுப்பப்பட்ட அறிக்கையைக் குறிக்கும்.

### (ஐ) காவல் நிலையம் :

காவல் நிலையம் என்பது சிறப்பாக அல்லது பொதுவாக ஒரு மாநில அரசு காவல் நிலையம் என்று அறிவித்துள்ள இடத்தைக் குறிக்கும். இதற்கான மாநில அரசால் குறிப்பிடப்பட்டுள்ள வட்டாரமும் இதில் அடங்கும்.

### (ஒ) அழைப்பாணை வழக்கு:

அழைப்பாணை வழக்கு என்பது பிடியாணை வழக்கு அல்லாத ஒரு வழக்கைக் குறிக்கும்.

### (ஓ) பிடியாணை வழக்கு:

பிடியாணை வழக்கு என்பது மரணம், ஆயுள் தண்டனை அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறை காவலை தண்டனையாக விதிக்கத்தக்க குற்றம் பற்றிய வழக்கினை குறிக்கும்.

## அத்தியாயம் - 4

பிரிவு- 36

### உயர்மட்டக் காவல் அலுவலர்களின் அதிகாரங்கள்:

ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பிலுள்ள அலுவலரைவிட உயர்ந்த பதவியிலுள்ள காவல் அலுவலர்கள் அந்த காவல் நிலைய பொறுப்பிலுள்ளவர் தமது நிலைய வரம்புக்குள் செயல்படுத்தக் கூடிய அதிகாரங்கள் அனைத்தையும் தான் பொறுப்பேற்றுள்ள வட்டார வரம்புக்குள் செயல்படுத்துதல் ஆகும்.

பிரிவு - 37

### குற்றவியல் நடுவருக்கும் காவல் அலுவலருக்கும் உதவி புரிதல் பொதுமக்கள் கடமை:

ஒவ்வொரு தனி நபரும் தம்மிடம் நியாயமான உதவி கேட்கின்ற ஒரு குற்றவியல் நடுவர் அல்லது காவல் அலுவலர்;

(அ) அந்த குற்றவியல் நடுவர் அல்லது காவல் அலுவலர் கைது செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒரு நபரை பிடிப்பதற்கும் தப்பி ஓடாமல் தடுப்பதற்கும் அல்லது;

(ஆ) அமைதிக்கு பங்கம் விளைவிப்பதை தடுப்பதற்கு அல்லது அடக்குவதற்கு அல்லது;

(இ) இரயில் போக்குவரத்து, கால்வாய், தந்தி அல்லது பொது சொத்துக்கு தீங்கு விளைவிக்க முயற்சி செய்யப்படுவதை தடுப்பதற்கு உதவி கேட்கும்போது ஒவ்வொருவரும் அத்தகைய உதவியினை அளிக்கக் கட்டுப்பாடு உடையவர்களாவார்.

பிரிவு - 39

### பொதுமக்கள் முன்வந்து தகவல் தரவேண்டிய குற்றங்கள்

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பின்வரும் பிரிவுகளின் கீழ் தண்டிக்கதக்க குற்றம் ஏதேனும் புரியப்பட்டதை அல்லது புரிவதற்கான கருத்தினை எவரேனும் கொண்டுள்ளார் என்பதை அறிந்துள்ள ஒவ்வொரு நபரும் அதாவது, -

(i) இரு பிரிவுகளும் உட்பட 121 முதல் 126 வரை மற்றும் 130-வது பிரிவு (அரசுக்கு எதிராக புரியப்படும் குற்றங்கள் என்று இந்தியதண்டனைச் சட்டத்தின் ஆறாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை)

(ii) 143, 145, 146, 147 மற்றும் 148-ல் பிரிவுகள் (இந்திய தண்டனைச் சட்டம் எட்டாவது அத்தியாயத்தில் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய குற்றங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது)

(iii) 161 முதல் 165-A வரை பிரிவுள்ள (பொதுஊழியர் கையூட்டு வழங்குவதைப் பற்றிய குற்றங்கள்)

(iv) 272 முதல் 278 முடிய இரு பிரிவுகளும் உட்பட்ட (உணவு, மருந்து பொருள் ஆகியவற்றில் கலப்படம் செய்தல்)

(v) 302, 303, 304 (உயிருக்கு ஊறு விளைவிக்கக் கூடிய குற்றங்கள்)

(vi) 382-ஆவது பிரிவு (உயிர் கொலை புரிதல், காயம் விளைவித்தல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளை செய்த பின்னர் களவாடுதல் அல்லது களவாடுவதற்காக பிறரை தடுத்து நிறுத்துதல் ஆகியவை)

(vii) இரு பிரிவுகளும் உட்பட்ட 392 முதல் 399-ஆம் பிரிவுகள் வரை மற்றும் 402 பிரிவு (கொள்ளையடித்தல் மற்றும் வன்முறை கொள்ளை ஆகிய குற்றங்கள்)

(viii) 409-ஆவது பிரிவு (பொது ஊழியர் நம்பிக்கை மோசடி செய்தல் ஆகிய குற்றம்)

(ix) இரு பிரிவுகளும் உட்பட்ட 431 முதல் 439 வரை உள்ள பிரிவுகள் (சொத்துக்களை அழித்தல்)

(x) 449 மற்றும் 459 — ஆவது பிரிவுகள் (அத்து மீறி வீடு புகுதல்)

(xi) இரு பிரிவுகளும் உட்பட்ட 456 முதல் 460 வரை உள்ள பிரிவுகள் (அத்துமீறி வீட்டுக்குள் புகுந்து மறைந்திருத்தல் ஆகிய குற்றங்கள்)

(xii) 489 — A முதல் 489 E வரை உள்ள பிரிவுகள் (நாணயம், ரூபாய் நோட்டுகள், வங்கி நோட்டுகள் பற்றிய குற்றங்கள்)

அதனைப்பற்றி அறிந்திருந்த நபர் உடனே அருகிலுள்ள குற்றவியல்நடுவர் அல்லது காவல் அலுவலரிடம் அத்தகைய குற்றம் புரியப்பட்டதைப் பற்றி அல்லது அத்தகைய குற்றத்தை புரிவதற்கான நோக்கம் இருப்பதைப் பற்றி, அப்படி தெரிவிக்காமல் இருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தால் அன்றியும் அத்தகைய காரணத்தை மெய்ப்பிக்கும் காரணம் இருந்தால் அன்றியும் அத்தகைய காரணத்தை மெய்ப்பிக்கும் சுமை அத்தகையவர் மீது இருக்கின்ற நிலையில் உடனடியாக தகவல் தர வேண்டும்.

பிரிவு - 40

**கிராம அலுவலர் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை**

ஒரு கிராமத்தின் அலுவல்கள் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிராம அலுவலரும் மற்றும் ஒரு கிராமத்தில் வசிக்கும் ஒவ்வொரு நபரும் பின்வரும் செய்திகளைப் பற்றி தனக்கு தெரிந்துள்ள விவரங்களை உடனுக்குடன் அருகில் உள்ள குற்றவியல் நடுவர் அல்லது அருகில் உள்ள காவல் நிலையத்தின் பொறுப்பிலுள்ள அலுவலரிடம் தகவல் கொடுக்க வேண்டும்.
அவைகளாவன.-

(அ) அந்த கிராமத்தில் அல்லது அதற்கு அருகில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக குடியிருக்கும் பிரசித்தி பெற்ற திருட்டு பொருள் வாங்குவோர் அல்லது விற்பவரைப் பற்றி;

(ஆ) அந்த கிராமத்தில் அல்லது அந்த கிராமத்தினுல்லே சென்று புகலிடம் தேடியுள்ள ஒரு நபர் தமக்கு தெரிந்தவரையில் அல்லது தாம் சந்தேகிக்கும் அளவுக்கு ஒரு தக்கர் (Thug) கொள்ளைக்காரர் காவலுக்கு தப்பி ஓடியுள்ள சிறைக் கைதி அல்லது குற்றவாளி என்று அறிவிக்கப் பட்டவர் என்று அறியும்போது அது பற்றியும் தகவல் கொடுக்க வேண்டும் ;

(இ) பிணையில் விட தகாத குற்றம் எதனையும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 143, 144, 145, 147 அல்லது 148 ஆகிய பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின்படி தண்டிக்கத்தக்க குற்றம் எதனையும் அந்த கிராமத்தில் அல்லது அதன் அருகாமையில் புரியப்பட்டதை அல்லது புரிவதற்கான கருத்து இருப்பது பற்றியும்;

(ஈ) அந்த கிராமத்தில் அல்லது அதற்கு அருகாமையில் நிகழ்ந்த எதிர்பாராத அல்லது இயற்கைக்கு மாறான மரணம் அல்லது சந்தேகிக்கத் தக்க சூழ்நிலையில் ஒரு மரணம் நிகழ்ந்திருக்கிறது அல்லது ஒருவர் காணாது போயிருக்கிறார் என்ற முடிவுக்கு வரத்தக்க நிலையில் ஒரு பிணம் அல்லது ஒரு பிணத்தின் ஒரு பகுதி அந்த கிராமத்தில் அல்லது அதற்கு அருகாமையில் கண்டு பிடிக்கப்பட்ட போது அப்படிப்பட்டவர் ஒரு பிணையில் விடுவிக்கத்தக்கதான ஒரு குற்றத்திற்குள்ளாகி இருக்கிறார் என்ற நிலையிலும்;

(உ) இந்தியாவில் புரியப்பட்டிருந்தால் இந்தியதண்டனைச் சட்டத்தின் 231 முதல் 238 பிரிவுகள் முடிய 302,304,382,392 முதல் 399 பிரிவுகள் முடிய 402,435,436,449,450,457 முதல் 460 பிரிவுகள் முடிய 489(A), 489 (B), 489 (C) மற்றும் 489 (D) பிரிவுகளின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரியப்பட்டிருப்பினும் அல்லது இந்தியாவிற்கு வெளியே புரியப்படுவதற்கான நோக்கம் உள்ளது என்ற போதும் ;

(ஊ) மாநில அங்கீகாரத்துடன் ஒரு சிறப்பு அல்லது பொது ஆணையின் மூலம் ஒரு மாவட்ட குற்றவியல் நடுவர் பொது ஒழுங்கினை பாதிக்கக் கூடிய அல்லது ஒரு நபரின் அல்லது சொத்தின் பாதுகாப்புக்காக தனக்கு தகவல் தருமாறு ஒருவரை கேட்டிருக்கும் போது அத்தகைய தகவல் தரப்பட வேண்டும்

## பிரிவு-40 (2)

1. இந்த பிரிவில் கிராமம் என்பது கிராமப்புற நிலங்களையும் உள்ளடக்கும்

2. குற்றவாளியென அறிவிக்கப்பட்டவர் என்பது ஒரு நீதி மன்றத்தால் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட ஒருவரையும் அல்லது அந்த சட்டத்தின் வரம்புக்குள் அடங்கும் பகுதிகளில் புரியப்பட்டால் இந்திய தண்டனை சட்டம் 302 304 392 முதல் 399 முடியவும் 402 435 436 449 450 457 முதல் 460 முடியவும் உள்ள பிரிவுகளின்படி தண்டிக்கதக்க குற்றம் எதனையும் இந்த சட்டத்தின்

வரம்புக்குள் வராத இந்திய பகுதியில் புரிந்ததுக்காக அங்குள்ள அதிகாரி ஒருவரால் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டுள்ள ஒருவரையும் உள்ளடக்கும்.

3. கிராமம் சம்பந்தப்பட்ட பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர் என்ற சொற்கள் கிராம பஞ்சாயத்து உறுப்பினர் ஒருவரையும் மற்றும் கிராம நிர்வாகத்துடன் தொடர்புள்ள பணிகளைப் புரிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள கிராமத் தலைவர் மற்றும் ஒவ்வொரு அலுவலரையும் மற்றவரையும் குறிக்கும்.

## அத்தியாயம் -5

### பிரிவு - 41

### கைது செய்வதைப் பற்றியது (CIPSODERA)

எந்த காவல் அலுவலரும் பிடியாணை இல்லாமல் அல்லது குற்றவியல் நடுவரின் உத்தரவு இல்லாமல் கீழே கண்ட சந்தர்ப்பங்களில் ஒருவரை கைது செய்யலாம்.

(அ) ***C. Cognizable offences*:** ஒரு கைது செய்வதற்குரிய குற்றத்தில் சம்மந்தப்பட்டுள்ள அல்லது அத்தகைய குற்றத்தில் சம்மந்தப்பட்டுள்ளர் என்று குற்றச்சாட்டுக்குள்ளான அல்லது அப்படி நம்புவதற்குரிய அத்தகைய தகவல் கிடைக்கப்பெற்ற அல்லது அத்தகைய நியாயமான சந்தேகத்திற்குள்ளான ஒருவரைக் கைது செய்யலாம்.

(ஆ) ***I – Implements used for house breaking*:** அதன் வசம் வைத்திருக்கக் கூடிய ஒரு கட்டிடத்தை உடைத்து உள்ளே புகுவதற்கான கருவி எதனையும் தன்னிடத்தில் வைத்திருக்கும் ஒருவர் சட்டபூர்வமாக அத்தகைய கருவியை வைத்திருப்பதற்கு சரியான காரணம் காட்ட தவறினால் கைது செய்யலாம்.

(இ) ***P – Proclaimed offender:*** இந்த சட்டத்தின்படி அல்லது மாநில அரசின் ஆணையின்படி ஒரு குற்றவாளி என்று அறிவிப்பு செய்யப்பட்டுள்ள ஒருவரை கைது செய்யலாம்.

(ஈ) ***S- Suspect to be in possession of stolen property:*** திருடப்பட்டது என்று நியாயமாக கருதப்படும் ஒரு பொருளை தம்மிடம் வைத்திருப்பவர் அல்லது அத்தகைய பொருளைப்பற்றிய குற்றம் ஒன்றை புரிந்துள்ளான் என்று நியாயமாக சந்தேகிக்கத் தக்க சூழ்நிலையில் உள்ள ஒருவரை கைது செய்யலாம்.

(உ) ***O. Obstructing a Police Officer:*** தன்னுடைய கடமையை ஆற்றுகின்ற ஒரு காவல் அலுவலரை தன் கடமையை செய்ய விடாமல் தடுக்கின்ற அல்லது சட்டப்பூர்வமாக வைக்கப்பட்டுள்ள காவலில் இருந்து தப்பியோடிய அல்லது தப்பி ஒட முயற்சி செய்கின்ற ஒருவரைக் கைது செய்யலாம்.

(ஊ) ***D- Deserter:*** இந்திய குடியரசின் முப்படை பிரிவினைத் துறந்து ஓடி வந்து விட்டவரை அல்லது ஓடி வந்து விட்டதாக சந்தேகபட்டவரை கைது செய்யலாம்.

(எ) ***E- Extradition*. :** இந்தியாவில் செய்யப்பட்டிருந்தால் குற்றம் என்று தண்டிக்கத்தக்க ஒரு செயலை இந்திய மண்ணுக்கு வெளியே புரிந்துள்ள அல்லது புரிந்துள்ளதாக சந்தேகிக்கத்தக்க அல்லது புரிந்திருப்பதாக நம்பகரமான தகவல் கிடைக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய முறையீடு செய்யப்பட்டுள்ளவரும் மற்றும் அதற்கான எந்த சட்டத்தின்படியேனும் நாடு கடத்துவதற்கேற்ற அல்லது கைது செய்யத்தக்க அல்லது காவலில் வைக்கத்தக்க ஒருவரை கைது செய்யலாம்.

(ஏ) ***R – Released convict:*** ஒரு காவல் கைதியாக இருக்கும்போது விடுவிக்கப்பட்ட 356(5) பிரிவின்படி விதிக்கப்பட்ட எந்த விதியையும் மீறி செயல்படுபவரை கைது செய்யலாம்.

(ஐ) ***A – Arrest on requistion:*** ஒரு நபரை குறிப்பிட்டு காட்டியும் அல்லது அவரை கைது செய்வதற்குரிய குற்றத்தினை அல்லது காரணத்தினை தெளிவாக காட்டியும், பிடியாணை இல்லாமல் அத்தகைய நபரை கைது செய்வதற்கு அதிகாரம் உள்ள வேறொரு காவல் நிலைய காவல் அலுவலர் எழுத்து மூலமாக அல்லது வாய்மொழியாக வேண்டுகோள் விடுத்திருக்கும் போது அத்தகைய நபர் ஒருவரைக் கைது செய்யலாம.

பிரிவு 41 (2)

ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பிலுள்ள எந்த அலுவலரும் இதே போன்று (மேலே சொன்னபடி) 109 அல்லது 110 CRPC ஆகிய பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ள நபர்களைக் கைது செய்ய அல்லது கைது செய்யப்படும்படி செய்யலாம்.

பிரிவு - 42

**ஊர், பேர் சொல்லமறுத்தவர்களைக் கைது செய்தல் *:***

1. ஒரு காவல் அலுவலரின் முன்னிலையில் கைது செய்வதற்குரியதல்லாத குற்றத்தை புரிந்திருக்கிறார் அல்லது புரிந்ததாக குற்றம் சாட்டப்படும்போது அந்த நபர் அந்த காவல் அலுவலர் கேட்கும் போது தன் பெயரையும் இருப்பிடத்தையும் தெரிவிக்க மறுத்தாலும் அல்லது அந்த அலுவலர் பொய்யானது என்று கருதத்தக்க வகையில் பெயரையும் ஓர் இருப்பிடத்தையும் தெரிவித்தாலும் அந்த நபரின் உண்மையான பெயரையும் இருப்பிடத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அந்த நபரை அந்த அலுவலர் கைது செய்யலாம்.

2. அவருடைய உண்மையான பெயரும் இருப்பிடமும் உறுதி செய்யப்பட்ட பிறகு தேவைப்படும்போது ஒரு குற்றவியல் நடுவரின் முன்னர் வருகை தருவதாக பிணையாளருடன் (ஜாமீன்) அல்லது பிணையாளர் இல்லாமல் எழுதி உறுதி அளிக்கப்படும் கடப்பாட்டின் (உத்தரவு) பேரில் அவரை விடுவிக்க வேண்டும்.

ஆனால் அத்தகைய நபரின் இருப்பிடம் இந்தியாவில் இல்லை என்றால் அவருடைய கடப்பாடு இந்தியாவின் குடியிருக்கும் இரண்டு பிணையாளர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3. கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அந்த நபருடைய உண்மையான பெயரையும் இருப்பிடத்தையும் அறிந்து கொள்ள இயலாவிடினும் அல்லது கடப்பாட்டை எழுதித் தர தவறும்போதும் அல்லது அப்படி தேவைப்படும்போதும் தக்க பிணையாளர்களை அளிக்க இயலாதபோதும் அவரை அந்த பகுதிக்கு அதிகார வரம்புள்ள ஒரு குற்றவியல் நடுவரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும்.

பிரிவு - 43

**கைது செய்வதற்கு தனியாருக்குள்ள அதிகாரம் *:***

1. கைது செய்வதற்குறியதும் பிணையில் விடாததுமான ஒரு குற்றத்தை தம்முன்னர் யார் புரிந்தாலும் அந்த நபரையும் அல்லது எந்தவித அறிவிக்கை செய்யப்பட்ட குற்றவாளியையும் அந்த தனியார் கைது செய்யலாம் அல்லது மற்ற எவராலும் கைது செய்யப்படும்படி செய்யலாம்.

அப்படி கைது செய்யப்பட்டவரை உடனடியாக ஒரு காவல் அலுவலரிடம் ஒப்படைக்க அல்லது ஒப்படைக்கப்படும்படி செய்ய வேண்டும். அப்படி காவலர் யாரும் இல்லாத போது அந்த நபரை அருகாமையிலுள்ள ஒரு காவல் நிலையத்திற்கு காவலில் கொண்டு செல்ல வேண்டும். அல்லது கொண்டு செல்லப்படும்படி செய்யவேண்டும்.

2. அத்தகைய நபர் 41-வது பிரிவின் கீழ் கூறப்பட்ட நபராக இருப்பின் அவரை ஒரு காவல் அலுவலர் மறுபடியும் கைது செய்ய வேண்டும்.

3. அந்த நபர் கைது செய்வதற்குறியதல்லாத ஒரு குற்றத்தை புரிந்திருக்கக்கூடும் என்று தோன்றும்போதும் மற்றும் அவர் தன் பெயரையும் இருப்பிடத்தையும் தெரிவிக்க மறுத்தாலும் அல்லது அந்த அலுவலருக்கு பொய்யானது என தோன்றத்தக்க ஒரு பெயரையும் இருப்பிடத்தையும் கூறும் இடத்தும் அவர் 42-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளபடி நடத்தப்பட வேண்டும். ஆனால் எத்தகைய ஒரு குற்றத்தையும் அவர் புரிந்திருக்கிறார் என்று நம்புவதற்கேற்ற காரணம் ஏதும் இல்லாதபோது அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

பிரிவு - 46

## கைது செய்வது எப்படி?

1. ஒருவரை கைது செய்யும்போது காவல் அலுவலர் அந்த நபரைத் தொட்டு அவருடைய உடலை காவலில் அடக்கவேண்டும். வாய்மொழி உத்தரவுக்கு கட்டுப்பட்டு அவர் அத்தகைய காவலுக்கு அடங்கிவிட்டால் அப்படி செய்யத்தேவையில்லை.

2. அந்த நபர் அப்படி அவரை கைதுசெய்வதற்கு எடுக்கப்படும் முயற்சியை வன்மையாக தடுக்கும்போதும் கைது செய்யப்படுவதை தவிர்க்க முயற்சி செய்யும்போதும் அந்த காவல் அலுவலர் அல்லது மற்ற நபர் அவரை கைதுசெய்வதற்குரிய வழிகள் அனைத்தையும் கையாளலாம்.

3. ஒரு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கத்தக்க குற்றச்சாட்டுக்குரிய ஒரு நபரைத் தவிர வேறு எவருக்கும் மரணத்தை விளைவிக்கத் தக்க உரிமையை இந்தப் பிரிவு அளிக்கவில்லை.

பிரிவு - 47

## கைது செய்வதற்குரிய நபர் நுழைந்த இடத்தை சோதனை இடுதல் :

1. பிடியாணையை செயல்படுத்துகின்ற ஒரு நபர் அல்லது கைதுசெய்வதற்குரிய அதிகாரம் உள்ள காவல்அலுவலர் எவரேனும் கைது செய்யப்பட வேண்டிய ஒரு நபர் ஒரு இடத்தில் இருக்கிறார் அல்லது அந்த இடத்திற்குள் நுழைந்திருக்கிறார் என்று எண்ணுவதற்குரிய காரணம் இருக்கும்போது அந்த இடத்தில் குடியிருப்பவர் அல்லது அந்த இடத்திற்கு பொறுப்பானவர் அத்தகைய நபர் அல்லது காவல் அலுவலர் அப்படி கேட்டால் அவருக்கு அந்த இடத்தில் உள்ளே சென்று அந்த நபரை தேடுவதற்குரிய வசதிகள் அனைத்தையும் செய்து தர வேண்டும்.

2. அப்படி ஒன்றாவது பிரிவில் கூறியுள்ளபடி அந்த இடத்திற்குள் போக முடியவில்லை என்றால் பிடியாணையின்கீழ்செயல்படும் நபர் மற்றும் அந்த இடத்தில் புகுந்து தேடுவதற்குரிய

பிடியாணையை பெறக்கூடும் எனினும் அப்படி பெறுவதற்குள் கைது செய்யப்பட வேண்டிய நபர் தப்பி ஓடிவிடக்கூடும் என்ற நிலையில் ஒரு காவல் அலுவலர் அந்த இடத்திற்குள் புகுந்து அந்த நபரை தேடுவது சட்டபூர்வமானதாகும். அப்படி அந்த இடத்திற்குள் புகுவதற்காக வெளியே அல்லது உட்கதவின் அல்லது அந்த வீட்டின் அல்லது அந்த இடத்தின் ஜன்னல் ஆகியவற்றை அவை கைது செய்யப்பட வேண்டிய நபருக்கு சொந்தமாக இருப்பினும் அல்லது வேறு எந்த நபருக்கு சொந்தம் உள்ளதாக இருப்பினும் தாம் கேட்கும் தம்முடைய அதிகாரத்தையும் நோக்கத்தையும் அறிவித்தும் அந்த இடத்திற்குள் செல்ல முடியாத போது உடைத்து வழி உண்டாக்கி உள்ளே செல்லலாம்.

ஆனால் அந்த இடத்தில் கைது செய்யப்படவேண்டிய நபர்அல்லாதவரும் தன் குல வழக்கப்படி பொதுமக்கள் முன்னிலையில் வராதவருமான ஒரு பெண்மணி குடியிருக்கும் போது அந்த இடத்தை விட்டு வெளி கிளம்புவதற்கு உரிமை உண்டு என்று அறிவித்து அவர் அப்படி அந்த இடத்தைவிட்டு வெளியே போவதற்குரிய நியாயமான வசதியினை செய்து கொடுத்த பின்னரே அந்த அறையை உடைத்துக்கொண்டு உள்ளே போகலாம்.

3. எந்த காவல் அலுவலரும் அல்லது கைது செய்வதற்குரிய அதிகாரம் பெற்ற வேறு எந்த நபரும் ஒருவரை கைது செய்வதற்காக சட்டபூர்வமாக ஓர் இடத்திற்குள் நுழைந்து பிறகு வெளியே வரமுடியாதபடி தடுத்து நிறுத்தப்பட்டால் ஒரு வீடு அல்லது அந்த இடத்தின் ஜன்னலை அல்லது உள்கதவினை அல்லது வெளிக்கதவினை உடைத்து திறந்து தம்மை அல்லது வேறு எந்த நபரையும் விடுவித்துக் கொள்ளலாம்.

பிரிவு - 48

## குற்றவாளிகளைத் தேடி மற்ற வரம்புகளில் செல்லல் :

ஒரு நபரை பிடியாணையின்றி கைது செய்வதற்காக அத்தகைய அதிகாரம் பெற்றுள்ள காவல் அலுவலர் ஒருவர் அவரை பின் தொடர்ந்து இந்தியாவின் எந்த பகுதிக்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

பிரிவு - 49

## அவசியமில்லாத தொந்தரவுகள் கொடுக்ககூடாது:

கைது செய்யப்பட்ட நபர் தப்பியோடாமல் தடுப்பதற்கு தேவையான அளவுக்கு அதிகமான தடங்களை பயன்படுத்தக்கூடாது.

பிரிவு - 50

## கைது செய்யப்பட்ட காரணத்தை வெளிப்படுத்துதல் :

1. பிடியாணையின்றி ஒருவரை கைது செய்யும் ஒவ்வொரு காவல் அலுவலரும் அல்லது மற்ற நபரும் ஒருவர் கைது செய்யப்பட்ட உடனே எந்த குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற விவரத்தை அல்லது அதற்குறிய வேறு காரணத்தையும் அவரிடம் தெரிவிக்க வேண்டும்.

2. பிணையில் விடத்தகாத குற்றமின்றி வேறு குற்றத்திற்காக பிடியாணையின்றி ஒரு காவல் அலுவலர் ஒரு நபரை கைது செய்தால் உடனே அந்த நபரிடம் அவர் பிணையில் விடுவித்துக்கொண்டு

செல்லலாம் என்றும் அதற்குரிய பிணையாளர்களுக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்க வேண்டும்.

***குறிப்பு:***

எதற்காக ஒருவர் கைது செய்யப்படுகிறார் என்பது உடனுக்குடன் அவருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். பிடியாணையின்றி கைது செய்யப்பட்ட நபரை பிணையில் விடுவிக்கலாம் என்ற போது அவருக்கு அதனை தெரிவிப்பதுடன் அதற்கு தேவையான பிணையாளர்களை தேர்ந்தெடுக்கவும் இந்த பிரிவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பிரிவு - 51

### கைது செய்யப்பட்டவரை சோதித்தல்:

1. பிணையில்விட இயலாத ஒரு பிடியாணையின்படி ஒரு நபர் ஒரு காவல் அலுவலரால் கைது செய்யப்படும்போது அல்லது பிணையில் விடக்கூடிய ஆணையின்படி அந்த நபர் கைது செய்யப்பட்டும், அந்த நபர் பிணையில் தன்னை விடுவித்துக்கொள்ளத் தக்க பிணையினை தர இயலாதபோதும் மற்றும்;

பிடியாணையின்றி அல்லது பிடியாணை பெற்றுள்ள ஒரு தனி நபரால் ஒரு நபர் கைது செய்யப்பட்டும் அவரை சட்டப்படி பிணையில் விடுவிக்க இயலாத போதும் அல்லது அதற்கேற்ற பிணையினை அவரால் தர இயலாதபோதும்;

அவரை கைது செய்யும் காவல் அலுவலர் அல்லது அவரை ஒரு தனியார் கைது செய்து ஒரு காவல் அலுவலரிடம் அவரை ஒப்படைக்கும்போதும் அந்த காவல் அலுவலர் அந்த நபரை சோதனையிட்டு அணிந்திருக்கும் ஆடைகளைத்தவிர அவரிடம் உள்ள மற்ற பொருட்கள் அனைத்தையும் பாதுகாப்பாக எடுத்து வைக்க வேண்டும். மற்றும் அவரிடமிருந்து ஏதாவது பொருள் கைப்பற்றும்போது அப்படி கைப்பற்றப்படும் பொருட்களுக்குரிய ரசீது அவரிடம் கொடுக்கப்படவேண்டும்.

2. எப்போதாவது ஒரு பெண்ணை சோதனையிட வேண்டும்போது பண்பு கருதி அவரை மற்றொரு பெண்மணியால் சோதனையிடும்படி செய்யவேண்டும்.

## பிரிவு - 52

### அபாயகரமான ஆயுதங்களைக் கைப்பற்றுதல் :

இந்த சட்டப்படி செய்கின்ற அலுவலர் அல்லது மற்ற நபர் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து அவர் வைத்திருக்கும் அபாயகரமான ஆயுதங்கள் அனைத்தையும் பெற்று அவற்றை இந்த சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி அந்த அலுவலர் அல்லது நபர் முன்னிலைப்படுத்தப்படவேண்டிய மன்றம் அல்லது அலுவலரின் முன்னர் ஒப்படைக்கப்படவேண்டும்.

## பிரிவு - 53

### காவல் அலுவலரின் வேண்டுகோளின் பேரில் குற்றவாளியை மருத்துவ பரிசோதனை செய்தல்:

1. ஒரு குறிப்பிட்ட இயல்புடையதும் மற்றும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் புரியப்பட்டதுமான குற்றத்திற்காக ஒருவர் கைது செய்யப்பட்டால் அந்த நபரை பரிசோதிப்பது அந்த குற்றத்திற்குரிய தடயங்களை அவரிடமிருந்து புலப்படுத்தக்கூடும் என்று கருதத் தக்க நியாயமான காரணங்கள்

தோன்றுமிடத்து ஓர் உதவி ஆய்வாளரின் நிலைக்கு தாழாத ஒரு காவல் அலுவலரின் வேண்டுகோளின் பேரில் பதிவு பெற்ற ஒரு மருத்துவர் மற்றும் அவர் கீழ் அவருடைய விருப்பத்திற்கு இணைந்து நல்லெண்ணத்துடன் பணி புரிகின்றவர் அத்தகைய தடயங்களை தருவதற்குரிய சங்கதிகளை முடிவு செய்வதற்கு தேவைப்படும் அளவிற்கு கைது செய்யப்பட்ட நபரை பரிசோதனை செய்வதோடு அத்தகைய சோதனைக்கு தேவைப்படும் அளவிற்கு தன் வலிமையையும் பயன்படுத்தலாம்.

2. இந்த பிரிவின்படி ஒரு பெண்மணியை பரிசோதனை செய்ய வேண்டியிருக்கும்போது அத்தகைய பரிசோதனை ஒரு பதிவு பெற்ற பெண் மருத்துவரால் அல்லது அவரது மேற்பார்வையின் கீழ் மட்டுமே செய்யப்பட வேண்டும்.

***விளக்கம்:***

இந்த பிரிவிலும் 54 ஆவது பிரிவிலும் 'பதிவு பெற்ற மருத்துவர்' என்பது இந்திய மருத்துவக்குழு சட்டத்தின் 2-ஆவது பிரிவின்படி ஒரு மருத்துவருக்குரிய அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதியை பெற்றிருப்பதோடு ஒரு மாநிலத்தின் மருத்துவப் பதிவேட்டில் இடம் பெற்றிருக்கும் ஒரு மருத்துவரைக் குறிக்கும்.

***குறிப்பு:***

வன்முறைப் புணர்ச்சி செய்ததாக ஒருவர் குற்றம் சாட்டப்படும்போது இத்தகைய பரிசோதனையின் மூலம் அவருடைய உடலிலும் பிறப்பு hint (M.L.C. Medical Legal Case) உறுப்புகளிலும் அது பற்றிய தடயம் ஏதும் காணப்படவில்லை என்று புலன் ஆனால் அது அவரது குற்றமற்ற தன்மையை உறுதிப்படுத்தக்கூடியதாகும். எனவே இத்தகைய பரிசோதனைகள் எவர் மீதும் பொய் குற்றம் சுமத்தபடாமல் காப்பதற்கு உதவுகின்றன. இதற்கு முன் உள்ள சட்டத்தில் இதற்கான வழிவகைகள் காணப்படவில்லை. எனவே இந்தப் பிரிவு வரவேற்க தக்கதாகும் என்று சட்ட வல்லுனர்களும் உயர் உச்ச நீதி மன்றங்களும் கருத்து தெரிவித்துள்ளன.

பிரிவு - 54

## கைது செய்யப்பட்டவரின் வேண்டுகோளின் பேரில் அவரை மருத்துவ பரிசோதனைக்கு ஆட்படுத்துதல்:

ஒரு குற்றச்சாற்றின்பேரில் அல்லது வேறு எப்படியாகினும் கைது செய்யப்பட்ட ஒருவரை ஒரு குற்றவியல் நடுவரின் முன்னர் கொண்டுவரப்படும்போது அல்லது காவலில் வைக்கப்பட்டிருக்கும் காலத்திலாவது தன்னுடைய உடலை பரிசோதித்து பார்த்தால் தான் குற்றம் புரிந்திருப்பவராக கூறுவதை மறுக்கதக்க தடயம் கிடைக்கும் என்றும் அல்லது தன்னுடைய உடலுக்கு மற்றவர் தீங்கு இழைத்துள்ளதை காட்டக்கூடிய தடயம் கிடைக்கும் என்றும் கூறுவாராகில் அந்த நபர் அத்தகைய வேண்டுகோளை விடுக்கும்போது அத்தகைய வேண்டுகோள் தொல்லை தருவதற்காக அல்லது காலம் கடத்துவதற்காக அல்லது நீதியின் நோக்கத்தை தோற்கடிப்பதற்காக செய்யப்பட்டுள்ளது என்று கருதினால் அந்த நபரின் உடல் ஒரு பிரிவு பெற்ற ஒரு மருத்துவரால் சோதிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட வேண்டும்.

பிரிவு - 55

## தன்கீழ் பணிபுரியோரை பிடியாணையின்றி ஒருவரை கைது செய்யுமாறு பணித்தல்:

1. ஒரு காவல் நிலைய பொறுப்பில் உள்ள ஓர் அலுவலர் அல்லது பன்னிரண்டாவது அத்தியாயத்தின்படி புலனாய்வு செய்து கொண்டிருக்கும் ஒரு காவல் அலுவலர் தனக்கு கீழே பணிபுரியும் அலுவலர் ஒருவரை (தன்னுடைய முன்னிலையில் அல்லாது) பிடியாணையின்றி கைது செய்யத்தக்க ஒருவரை அப்படி பிடியாணையின்றி கைது செய்யுமாறு பணிக்கும்போது அப்படி கைது செய்ய வேண்டிய அலுவலருக்கு கைது செய்யப்பட வேண்டிய நபரையும் அவரைக் கைது செய்வதற்குரிய குற்றம் அல்லது காரணம் குறிப்பிட்டு எழுதி எழுத்து மூலமான உத்தரவினை அளிக்கவேண்டும். மற்றும் அந்த அலுவலர் அப்படி கைது செய்வதற்கு முன்னர் கைது செய்யப்பட வேண்டிய நபருக்கு அந்த உத்தரவின் சுருக்கத்தை அறிவிப்பதுடன் அந்த உத்தரவையும் அவருக்கு காட்ட வேண்டும்.

2. 1-வது கிளைக்கூறில் கூறப்பட்டவை எதுவும் 41-வது பிரிவின் கீழ் ஒருவரைக் கைது செய்வதற்கு ஒரு காவல் அலுவலருக்குரிய அதிகாரத்தினைப் பாதிக்காது.

பிரிவு - 56

## கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக நடுவர் முன் கொண்டுசெல்லல்:

பிடியாணை இல்லாமல் ஒருவரை கைது செய்யும் காவல் அலுவலர் அவரை பிணையில் விடுவது பற்றி இந்த சட்டத்தில் கூறப்பட்டவற்றிற்கு உட்பட்டு தேவையற்ற காலதாமதமின்றி கைது செய்யப்பட்டவரை அந்த வழக்கை விசாரித்தும் வரம்புள்ள ஒரு குற்றவியல் நடுவர் முன் கொண்டு செல்ல வேண்டும் அல்லது ஒரு காவல் நிலைய பொறுப்பில் இருப்பவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பிரிவு - 57

## கைது செய்யப்பட்டவரை 24 மணி நேரத்திற்குமேல் காவலில் வைக்கக்கூடாது:

பிடியாணையில்லாமல் கைது செய்யப்பட்டவர் எவரையும் தேவைக்கு அதிகமான காலம் அதற்காக இந்த சட்டத்தின் குற்றவியல் நடுவர் 167-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையின்றி இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேல் எந்த காவல் அலுவலரும் காவலில் வைக்கக் கூடாது அந்த கால கணிப்பில் குற்றவியல் நடுவரிடம் போவதற்கு பயணம் செய்த நேரத்தைக் கழித்து கொள்ளலாம்.

பிரிவு - 59

காவல் அலுவலரால் கைது செய்யப்பட்ட எவரையும் ஒரு குற்றவியல் நடுவரின் உத்தரவு அல்லது பிணை அல்லது அவரால் இயற்றப்படும் கடப்பாடு இன்றி (Special-order from Magistrate) விடுவித்தல் ஆகாது.

பிரிவு - 60

## தப்பிவிட்ட கைதிகளைத் திரும்ப பிடித்தல்:

1. சட்டப்பூர்வமான காவலில் இருந்து ஒருவன் தப்பி ஓடினாலும் அல்லது விடுவிக்கப்பட்டாலும் எவருடைய காவலில் இருந்து அவர் அப்படி தப்பி ஓடினாலோ அல்லது விடுவிக்கப்பட்டாலோ அவர் உடனே அந்த நபரை தொடர்ந்து சென்று இந்தியாவில் எந்த இடத்தில் இருந்தாலும் கைது செய்யலாம்,

2. அப்படி அத்தகைய கைதியினைக் கைது செய்தவர் அப்படி செய்வதற்கேற்ற பிடியாணை இன்றி கைது செய்திருந்தாலும் அல்லது கைது செய்வதற்குரிய அதிகாரம் உள்ள காவல் அலுவலராக இல்லாது இருப்பினும் 47-வது பிரிவில் கூறப்பட்டுள்ளவை மேற்கண்ட (1) வது கிளை கூறின்படி செய்யப்பட்ட கைதுக்கும் பொருந்தும்..

## அத்தியாயம் - 6

## முன்னிலைப்படுத்துவதை வலியுறுத்துவதற்கான வகை முறைகள்

## PROCEDUDURES OF INSISTING TOP PRIORITIES

பிரிவு - 61

***அழைப்பாணை:***

இந்த சட்டத்தின்படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் அழைப்பாணை ஒவ்வொன்றும் நகலோடு எழுத்து மூலமாக தயாரிக்கப்பட்டு அந்த நீதிமன்றத்தின் தலைமை அலுவலரால் அல்லது அவ்வப்போது அதற்கென உயர்நீதிமன்றம் நியமித்துள்ள ஓர் அலுவலரால் கையொப்பம் இட்டிருப்பதுடன் அந்த நீதிமன்றத்தின் முத்திரையும் பொறிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

பிரிவு - 62

**சம்மனை சார்வு செய்தல் எவ்வாறு?**

1. ஒவ்வொரு அழைப்பாணையும் ஒரு காவல் அலுவலரால் அளிக்கப்பட வேண்டும் அல்லது அதற்கென்று மாநில அரசு வகுத்துள்ள விதிகளுக்குட்பட்டு அதனை வழங்கும் மன்றத்தின் அலுவலரால் அல்லது வேறு ஊழியரால் அளிக்கப்பட வேண்டும்.

2. இயன்ற வகையில் அழைப்பாணையை நேரிடையாக அல்லது அப்படி அழைக்கப்பட்டவரிடம் வழங்க வேண்டும். அல்லது அதன் நகல்களில் ஒன்றை அவரிடம் வழங்குவதன் மூலம் சார்வு செய்ய வேண்டும்.

3. அழைப்பாணையை பெற்றுக் கொள்ளும் நபர் அப்படி சார்வு செய்யும் அலுவலரால் வேண்டப்படும்போது அதன் நகல்களில் ஒன்றின் பின்புறத்தில் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக கையொப்பமிட்டுத் தரவேண்டும்.

பிரிவு - 63

**வாரியத்திற்கு அழைப்பாணையை சார்வு செய்தல்:**

ஒரு வாரியத்திற்கு சார்வு செய்யப்பட வேண்டிய அழைப்பாணையை அதனுடைய செயலாளர், வட்டார மேலாளர் அல்லது வேறு முக்கிய அலுவலரிடம் சார்வு செய்வதன் மூலமும் அல்லது இந்தியாவில் உள்ள அந்த வாரியத்தின் முதன்மை அலவலரின் முகவரி இட்டு, பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். அஞ்சலில் அது போய் சேர்ந்ததும் அது அவருக்கு சார்வு செய்யப்பட்டதாகக் கொள்ளவேண்டும்.

***குறிப்பு:***

இந்த பிரிவில் வாரியம் அல்லது கார்பொரேஷன் என்பது சட்ட ரீதியாக இந்தியாவில் உள்ள ஒரு கம்பெனியையோ, அலுவலகத்தையோ அல்லது வாரியத்தையோ 1860–ஆம் ஆண்டின் சங்கங்களை பதிவு செய்யும் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு சங்கத்தையும் குறிக்கும்.

பிரிவு - 64

## அழைப்பாணைக்குரியவர்கள் அகப்படாதபோது:

உரியகவனம் செலுத்தியும் அழைப்பாணையை பெறவேண்டிய நபரை கண்டுபிடிக்க இயலவில்லை எனில் அந்த அழைப்பாணையை அவருடன் வசிக்கும் அவரது குடும்பத்தில் உள்ள ஒரு வயது வந்த நபரிடம் அதனை அளிப்பதன் மூலம் சார்வு செய்யலாம், மற்றும் அப்படி பெறுகின்ற நபர் அந்த அலுவலர் அப்படி கேட்கும்போது அந்த அழைப்பாணையின் நகலின் பின்புறத்தில் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாக கையொப்பம் இடவேண்டும்.

***விளக்கம் :***

இந்த பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு வேலைக்காரரை குடுப்பத்தைச் சார்ந்தவராக கொள்ள இயலாது.

பிரிவு - 65

## இதற்கு முன்னால் சொல்லப்பட்டவைகள் மூலம் அழைப்பாணையை சார்வு செய்யாதபோது நடவடிக்கைகள்:

தகுந்த அக்கறைஎடுத்தும் பிரிவு 62,63 அல்லது 64–வது பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளபடி சார்வு செய்யமுடியவில்லை எனில் அதனை சார்வு செய்யும் அலுவலர் அந்த நபர் வசிக்கும் அல்லது வழக்கமாக குடியிருக்கும் இல்லத்தில் கண்ணுக்கும் தெரிவிக்கக்கூடிய ஓர் இடத்தில் அந்த அழைப்பாணையின் நகலை ஒட்ட வேண்டும். அதன் பின்னர் உரிய விசாரணைக்கு பின் அந்த நீதிமன்றம் அந்த அழைப்பாணையை சார்வு செய்யப்பட்டதாக கொள்ளலாம் அல்லது தாம் சரியென்று கருதும் வகையில் அதை புதிதாக சார்வு செய்யவேண்டும் என்று உத்தரவிடலாம்.

பிரிவு - 66

## அரசு ஊழியர்களிடம் சார்வு செய்தல்:

1. அழைக்கப்பட்ட நபர் ஓர் அரசு ஊழியராக இருப்பின் அந்த அழைப்பாணையை விடுவிக்கும் நீதிமன்றம் அதனை அவர் பணிபுரியும் அலுவலக தலைவருக்கு நகலோடு அனுப்பி வைக்கவேண்டும். மற்றும் அந்த அலுவலக தலைவர் அதனை 62–வது பிரிவில் கூறியபடி சம்மந்தப்பட்ட நபருக்கு சார்வுசெய்யவேண்டும். அதனை அந்த பிரிவில் கண்டுள்ளபடி தமது குறிப்போடும் கையொப்பத்துடனும் அந்த மன்றத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கவேண்டும்.

2. அத்தகைய கையொப்பம் அதனை சார்வு செய்வதற்குரிய சாட்சியமாக கொள்ளப்படும.

## கைது செய்வதற்கான பிடியாணை

பிரிவு - 70

**பிடியாணையும் அதன் காலமும்:**

**1.** ஒரு நீதி மன்றத்தால் விடுக்கப்படும் கைது செய்வதற்குரிய பிடியாணை ஒவ்வொன்றும், எழுத்து மூலமாக அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிப்பவரின் கையொப்பத்துடன் அந்த நீதிமன்றத்தின் முத்திரை பொறிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு பிடியாணையும் அதனை செயல்படுத்தப்படும் வரையிலும் அல்லது அதனை விடுத்த நீதிமன்றத்தால் ரத்து செய்யப்படும் வரையிலும் அமுலில் இருக்கும்..

பிரிவு — 71

**ஜாமீன் கொடுப்பதற்கான உள்ள அதிகாரம்:**

1. ஒருவரை கைது செய்வதற்குரிய பிடியாணையை விடுக்கின்ற நீதிமன்றம் தன் கருத்துக்கு தகுந்தபடி அந்த பிடியாணையில் சம்மந்தப்பட்ட நபர் தகுந்த பிணையாளர்களுடன் ஒரு குறிப்பிட்ட சமயத்திலும் அல்லது நீதி மன்றம் பணிக்கும்படி அதற்கு பின்னும் வருகை தருவதாக ஒத்துக்கொண்டு ஒரு பிணை ஆவணத்தை இயற்றி தருவதாக இருப்பின் அந்த ஆணையினை செயல்படுத்தும் அலுவலர் அந்த பிணையினை ஏற்றுக்கொண்டு அந்த நபரை காவலில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று மேற்குறிப்பு செய்யலாம்.

**2. அந்த மேற்குறிப்பில்,-**

அ) பிணையாளர்களின் எண்ணிக்கை;

ஆ) அவர்களும் கைது செய்யப்பட வேண்டியதற்காக பிடியாணை விடுவிக்கப்பட்ட நபரும் ஆகியோருக்குரிய பிணைத்தொகை;

இ) அந்த நபர் அந்த நீதி மன்றத்தின் முன்னர் வருகை தரவேண்டிய நாளும் நேரமும் காணப்பட வேண்டும்.

3. எவ்வப்போது இந்த பிரிவின்படி பிணை ஏற்கப்படுகின்றதோ அப்பொழுது அந்த பிடியாணையை செயல்படுத்துமாறு உத்தரவிடப்பட்ட அலுவலர் அந்த பிணை ஆவணத்தினை அந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

பிரிவு -72

**பிடியாணையை செயல்படுத்துவோர்:**

1. கைது செய்வதற்குரிய பிடியாணை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காவல் அலுவலர்களுக்கு செயல்படுத்துவதற்காக அனுப்பபடவேண்டும். ஆனால் அத்தகைய பிடியாணையைப் பிறப்பிக்கும் நீதிமன்றம் அதனை உடனே செயல்படுத்த வேண்டும் என்று கருதினாலும் அல்லது அப்படி செயல்படுத்துவதற்கேற்ற காவல் அலுவலர் எவரும் அருகில் இல்லாத போதும் அதனை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறு நபர்களிடம் அந்த பொறுப்பினை ஒப்படைக்கலாம்.

2. ஒன்றுக்கு மேற்பட்ட காவல் அலுவலர்களிடம் பிடியாணையை செயல்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் அதனை அவர்கள் அனைவரும் அல்லது அவர்களில் யாராவது ஒருவரும் நிறைவேற்றலாம்.

பிரிவு - 74

**காவல் அலுவலருக்கு அளிக்கப்பட்ட பிடியாணை:**

ஒரு காவல் அலுவலருக்கு அளிக்கப்பட்டுள்ள பிடியாணையை அதில் பெயர் குறிப்பிட்டுள்ள அல்லது அந்த அலுவலரால் அப்படி பெயர் குறிப்பிட்டு மேற்குறிப்பு செய்யப்பட்ட வேறு எந்த காவல் அலுவலராலும் நிறைவேற்றப்படலாம்.

பிரிவு - 75

**பிடியாணையின் சுருக்கத்தை அறிவித்தல்:**

ஒரு பிடியாணையை நிறைவேற்றும் காவல் அலுவலர் அல்லது வேறு நபர் அப்படி கைது செய்யப்பட இருக்கும் நபரிடம் அந்த பிடியாணையின் விவரங்களை கூறுவதுடன் அந்த நபர் அப்படி கேட்கும்போது அந்த பிடியாணையையும் அவரிடம் காட்ட வேண்டும்.

பிரிவு - 76

**கைது செய்யப்பட்டவரை காலதாமதமின்றி நீதிமன்றத்திற்கு கொண்டு வருதல்:**

71-வது பிரிவில் பிணையில் விடுவதுபற்றி கூறப்பட்டுள்ளவற்றிற்கு ஆட்பட்டு ஒரு நபரை கைது செய்வதற்காக பிடியாணையை நிறைவேற்றும் காவல் அலுவலர் அல்லது வேறு நபர் தேவையற்ற காலதாமதமின்றி அந்த நபரை சட்டப்படி முன்னிலைப்படுத்துவதற் குரிய நீதிமன்றத்தின் முன்னர் கொண்டு வரவேண்டும். கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து அந்த நீதிமன்றத்திற்குப் பயணம் செய்வதற்குரிய நேரத்தைச் சேர்க்காமல் அவரை அப்படி கொண்டுசெல்வதற்கு உரிய காலதாமதம் 24 மணி நேரத்திற்கு மேல் ஆகக்கூடாது.

பிரிவு - 77

**பிடியாணையை நிறைவேற்றுவதற்குரிய இடம்:**

கைது செய்வதற்கான பிடியாணையினை இந்தியாவில் எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் நிறைவேற்றலாம்.

## அறிவிப்பும் கைப்பற்றுதலும்

பிரிவு - 82

## தலைமறைவாகிவிட்டவர்களைப் பற்றிய அறிவிப்பு:

1. கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு அந்த நபர் தலைமறைவாகிவிட்டால் அல்லது தன்னை ஒளித்துக்கொண்டு இருக்கிறார் என்றும் அதனால் அந்த பிடியாணை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது என்று ஒரு விசாரணை அதிகாரி ஒரு நீதிமன்றத்தில் சாட்சியம் கொடுத்த பின்போ அல்லது கொடுக்காமலோ அந்த நீதி மன்றம் நம்புவதற்கேற்ற காரணம் இருக்கும்போது அந்த நபர் ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தர வேண்டுமென்று எழுத்துமூலமான அறிவிப்பு செய்யலாம். அப்படி வருகை தருவதற்கான நாள் அந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

2. (i) அந்த அறிவிப்பு கீழே கண்டுள்ளபடி வெளியிடப்பட வேண்டும்

அ) அந்த அறிவிப்பு அத்தகைய நபர் வழக்கமாக குடியிருக்கும் பகுதியில் ஒரு பகிரங்கமான இடத்தில் படிக்கப்படவேண்டும்.

ஆ) அந்த நபர் வழக்கமாக குடியிருக்கும் வீடு அல்லது குடிசை பகுதியின் ஒரு பகிரங்கமான இடத்தில் அல்லது அந்த நபர் இருக்கும் நகரம் அல்லது கிராமப் பகுதியின் பகிரங்கமான ஓர் இடத்தில் ஒட்டப்படவேண்டும்.

இ) அந்த நீதி மன்றத்தின் ஒரு பகிரங்கமான இடத்திலும் அதனை ஒட்டிவைக்க வேண்டும்.

(ii) தகுந்தது என கருதினால் அந்த அறிவிப்பினை அந்த நபர் குடியிருக்கும் பகுதியில் புழக்கத்தில் உள்ள ஒரு நாளேட்டிலும் அந்த நீதிமன்றம் வெளியிடலாம்.

3. இரண்டாவது கிளைகூறின் (i) உட்பகுதியில் கூறப்பட்டபடி குறிப்பிட்ட நாளில் அத்தகைய அறிவிப்பு செய்யப்பட்டது என்று அந்த அறிவிப்பை செய்துள்ள நீதி மன்றத்தின் எழுத்தில் உள்ள ஒரு வாக்குமூலம் அத்தகைய அறிவிப்பு இந்த பிரிவுக்கு இணங்க செய்யப் பட்டுள்ளது என்பதற்கும் அத்தகைய அறிவிப்பு குறிப்பிட்ட நாளில் வெளியிடப்பட்டுள்ளது என்பதற்கும் போதியசாட்சியம் ஆகும்.

பிரிவு - 83

## தலைமறைவானவர்களின் சொத்துக்களைக் கைப்பற்றுதல்:

1. 82-வது பிரிவின்படி ஓர் அறிவிப்பை வெளியிடுகின்ற நீதிமன்றம் அத்தகைய அறிவிப்புக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமென்றாலும் அதற்குரிய காரணங்களை எழுத்து மூலமாக பதிவு செய்த பின்னர் அந்த அறிவிப்புக்கு இலக்கானவருடைய நிலை பெயரக்கூடிய அல்லது நிலை பெயராத சொத்துக்களை அல்லது அந்த இரண்டு வகைகளையும் கைப்பற்றுமாறு உத்தரவிடலாம்.

அத்தகைய உத்தரவு இடுவதற்கு முன்பு ஓர் உறுதிமொழி வாக்குமூலத்தின் மூலம் அல்லது வேறெப்படியேனும் அத்தகைய நபர் :

(அ) தம்முடைய சொத்து முழுமையையும் அல்லது ஏதேனும் பகுதியை விற்பதற்குரிய ஏற்பாடுகளில் முனைந்து இருக்கிறார்; அல்லது

ஆ) அந்த மன்றத்தின் வட்டாரத்தின் வரம்புக்குள்ளிருந்து தமது சொத்தின் எந்த பகுதியாகிலும் அல்லது முழுமையாகவும் அகற்றுவதற்கு முயற்சி செய்கிறர் என்று உறுதி செய்து கொண்ட பின்னர் அத்தகைய அறிவிப்பினை வெளியிடும் அதே நேரத்தில் அந்த சொத்துக்களைக் கைப்பற்றுமாறும் உத்தரவிடலாம்.

2. அந்த நபருக்கு சொந்தமாதும், அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மாவட்டத்திற்குள் உள்ளதும், அந்த நபரின் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கேற்ற அதிகாரத்தை வழங்கும், மற்றும் அந்த மாவட்டத்திற்கு வெளியே உள்ள சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கும், சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் குற்றவியல் நடுவரின் மேற்குறிப்பினை அந்த உத்தரவை பெறுவதன் மூலம் மாவட்டத்திற்கு வெளியே உள்ள சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கேற்ற அதிகாரமும் பெறப்படும்.

3. கைப்பற்றப்படுவதற்கான உத்தரவுக்குரிய சொத்து ஒரு கடன் அல்லது நிலைபெயரக்கூடிய சொத்தாக இருப்பின் இந்த பிரிவின்படி, -

அ) கைப்பற்றுதல்; அல்லது

ஆ) ஒரு பாதுகாவலரை நியமித்தல் அல்லது

இ) அத்தகைய சொத்தினை ஒரு பகிரங்க அறிவிக்கையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு அவரது சார்பில் வேறு எவருக்கும் ஒப்படைக்கக் கூடாது என்ற கட்டளையின் வாயிலாக ஒப்படைத்தல் ஆகாது என்று எழுத்து மூலமாக தடைசெய்யும் ஆணையின் வாயிலாக; அல்லது

ஈ) நீதிமன்றம் தகுதியானது என்று கருதும் அத்தகைய முறைகள் யாவற்றின் மூலமாக அல்லது அவற்றில் ஏதேனும் இரண்டின் மூலமாக.

4. கைப்பற்றப்படுவதற்கான உத்தரவுக்குரிய சொத்து அசையாபொருளாக இருப்பின் இந்தப் பிரிவின்படி கைப்பற்றுவதானது அரசுக்கு நிலவரி செலுத்தும் நிலத்தைப்பற்றிய மட்டில் அந்த நிலம் அமைந்துள்ள மாவட்டத்தின் ஆட்சியர் மூலமாகவும் மற்ற சொத்துக்களைப் பொறுத்த வரையில் கிழேகுறிப்பிட்டு உள்ளவாறு செய்யப்பட வேண்டும். அப்படிப்பட்ட சொத்தை,-

அ) அனுபோகத்தில் எடுத்துக்கொள்வதன் மூலமாக; அல்லது

ஆ) அதற்கென ஒரு பாதுகாவலரை நியமிப்பதன் மூலமாக; அல்லது

இ) பகிரங்க அறிவிக்கை கண்டுள்ளவருக்கு அவரது சார்பிலுள்ள வேறு எவருக்கும் அந்த சொத்தை ஒப்படைக்கும்போது அதற்குரிய வாடகையினை அளிக்கக் கூடாதென்று தடைசெய்யக்கூடிய ஓர் ஆணையின் வாயிலாக; அல்லது

ஈ) நீதிமன்றம் தகுதியானது என்று கருதும் அத்தகைய முறைகள் எல்லாவற்றின் மூலமாக அல்லது அவற்றின் இரண்டின் மூலமாக.

5. கைப்பற்றப்படுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள சொத்து கால்நடையாக அழியும் தன்மையுடையதாக இருப்பின் நீதிமன்றம் அதனை உடனடியாக விற்பனை செய்வது நலமெனக் கருதினால் அவ்வாறு ஆணையிடலாம். அவ்வாறு விற்கப்பட்டு கிடைக்கும் தொகை அந்த நீதிமன்றத்தின் ஆணைப்படி இருத்தல் வேண்டும்.

6. இந்த பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள ஒரு பாதுகாவலரின் கடமைகளும் கடப்பாடுகளும் 1908-ஆம் ஆண்டின் உரிமை இயல் சட்டத்தின்படி நியமிக்கப்பட்டுள்ள பாதுகாவலர் ஒருவருக்கு விதிக்கப்பட்டவையாகும்.

## அத்தியாயம் - 7

## சோதனைகள் பற்றிய பொது விதிகள்

பிரிவு - 99

**சோதனைக்குரிய பிடியாணைகள் பற்றி:**

93, 94, 95 அல்லது 97-வது பிரிவுகளின்படி பிறப்பிக்கப்படும் பிடியாணைகளும் பிரிவு 38,70,72,74,77,78 மற்றும் 79 ஆகிய பிரிவுகளில் விதிக்கப்பட்டவை பொருந்தும்.

பிரிவு - 100

**அடைக்கப்பட்டுள்ள இடங்களில் பொறுப்பாளர்கள் சோதனையை அனுமதிப்பது பற்றிய பொதுவிதிகள் :**

1. இந்த அத்தியாயத்தின்படி சோதனைக்கு அல்லது ஆய்வுக்கு ஆட்படுத்தப்படும் இடம் அடைக்கப்பட்டிருக்கும்போது அந்த இடத்தில் குடி இருப்பவர் அல்லது அதன் பொறுப்பில் இருப்பவர் அந்த பிடியாணையை நிறைவேற்ற வருபவர் அல்லது காவல் அலுவலர் அந்தப் பிடியாணையை காட்டி கேட்கும்போது அந்த இடத்திற்குள் கட்டுப்பாடு இல்லாமல் நுழைந்து சோதனை செய்வதற்குரிய உதவிகள் அனைத்தையும் செய்ய வேண்டும்.

2. அப்படி அந்த இடத்திற்குள் நுழைய இயலாதபோது அந்த பிடியாணையை செயல்படுத்தும் நபர் அல்லது காவல் அலுவலர் 47—வது பிரிவின் (2) வது கூற்றில் விளக்கப்பட்டுள்ளபடி செயல்படலாம்.

3. அந்த இடத்தில் உள்ள நபர் தம்மிடம் சோதனைக்குரிய பொருளை மறைத்து வைத்துள்ளார் என்ற சந்தேகம் தோன்றுமிடத்து அந்த நபரை சோதனை செய்து அந்த பொருளை தேடலாம். ஆனால் அந்த நபர் ஒரு பெண்ணாக இருக்கும்போது பண்பாடு கருதி அவரை மற்றொரு பெண்ணால் மட்டுமே சோதனை செய்யவேண்டும்.

4. இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளபடி ஒரு சோதனையை தொடங்குவதற்கு முன்னர் அந்த சோதனையைச்செய்ய முன்வரும் அலுவலர் அல்லது மற்ற நபர் சோதனை செய்யப்படும் இடம் உள்ள வட்டாரத்தை சேர்ந்த இரண்டு தனிப்பட்ட மதிப்பிற்குரிய நபர்களை அந்த சோதனைக்கு சாட்சிகளாக அழைக்க வேண்டும். அப்படி அந்த வட்டாரத்தை சார்ந்த நபர் யாரும் கிடைக்காதபோதும் அப்படி சாட்சியாக இருக்க முன்வராத போதும் வேறு வட்டாரத்தில் இருந்து அத்தகைய நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்குரிய உத்தரவை அவர்களுக்கு எழுத்து மூலமாக அளிக்கவேண்டும்.

5. சோதனை அவர்கள் முன்னிலையில் செய்யப்படவேண்டும். அந்த சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பண்டங்களையும் அவைகள் எந்த இடத்தில் இருந்து கைப்பற்றபட்டன

என்பதையும் ஒரு பட்டியல் தயார் செய்து அந்த சாட்சிகளின் கையொப்பங்களை அந்த பட்டியலில் பெற வேண்டும் ஆனால் அத்தகைய சாட்சிகளை அதுபற்றி சாட்சியம் கூறுவதற்காக நீதி மன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தாலன்றி அத்தகைய சோதனைக்கு சாட்சிகளாக இருந்தவர்களை நீதி மன்றத்திற்கு வருகை தருமாறா கேட்கக்கூடாது.

6. அப்படி சோதனை செய்யப்படும் அந்த கட்டிடத்தில் குடியிருப்பவர் அல்லது அவருடைய பிரதிநிதி ஆகியவர் அத்தகைய சோதனையின்போது உடனிருப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும. அந்த சோதனையின்போது தயார் செய்யப்பட்டதும் சாட்சிகளின் கையொப்பம் உடையதுமான சோதனை பட்டியலின் நகலை அத்தகைய குடியிருப்பவருக்கு அல்லது அவருடைய பிரதிநிதிக்கு கொடுக்க வேண்டும்.

7. மூன்றாவது கூற்றின்படி எந்த நபரேனும் சோதனை செய்யப்பட்டால் அவரிடமிருந்து எடுக்கப்பட்ட பொருட்கள் அனைத்தையும் பற்றி ஒரு பட்டியல் தயாரித்து அதன் நகலை சோதனை செய்யப்பட்ட நபரிடம் கொடுக்க வேண்டும்.

8. எழுத்து மூலமாக வருகை தந்து ஒரு சோதனையின் போது சாட்சியாக உடனிருக்குமாறு அழைக்கப்பட்ட எவரேனும் தக்க காரணமின்றி அப்படி செய்ய மறுத்தாலும் வருகை தராதிருந்தாலும் அவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் 187-ஆவது பிரிவின்படி குற்றம் புரிந்ததாக கருதப்படுவார்.

பிரிவு -102

### சில சொத்துக்களைக் கைப்பற்ற காவல் அலுவலருக்குள்ள அதிகாரம்:

1. களவாடப்பட்டதாக சந்தேகிக்கத்தக்க பொருளை அல்லது அதன் சூழ்நிலையையொட்டி எந்த குற்றமேனும் புரியப்பட்டிருக்கக்கூடும் என்று எண்ணும் நிலையில் எந்தப்பொருளையும் கைப்பற்றலாம்.

2. அத்தகைய காவல் அலுவலர் ஒரு காவல் நிலைய பொறுப்பிலுள்ள அலுவலரின் தகுதிக்கு குறைந்தவராக இருப்பின் அப்படி கைப்பற்றியதை பற்றிய அறிக்கையினை அந்த பொறுப்பாளருக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

## அத்தியாயம் - 8

### அமைதி காப்பதற்கும் நன்னடத்தைக்கும் காப்பு

பிரிவு - 107

### அமைதி காப்பதற்குரிய வழி வகைகள்:

1. எந்த நபராவது பொதுஅமைதிக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய செயலை புரியக்கூட்டம் அல்லது பொது அமைதியை குலைக்கக் கூடும் அல்லது அப்படி பொது அமைதிக்கு பங்கம்விளைவிக்கக் கூடிய தீங்கினைப் புரியக்கூடும் என்ற தகவல் கிடைக்கப்பெற்ற செயல்துறை நடுவர் அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்கான காரணங்கள் இருக்கின்றன என்று கருதினல் அவர் அந்த நபர்

கீழே விளக்கப்பட்டுள்ளபடி பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்காமல் இருக்கிறேன் என்று ஒரு கடப்பாட்டு ஆவணம் ஒன்றினை ஏன் எழுதி தரும்படி கேட்கப்படக்கூடாது என்பதற்குரிய காரணம் காட்டுமாறு கேட்கலாம். அத்தகைய கடப்பாட்டு ஆவணம் ஓர் ஆண்டுக்கு மிகாமல் காலவரம்பு பெற்றிருத்தல்வேண்டும்.

2. இந்த பிரிவின்கீழ் எடுக்கப்படும் நடவடிக்கை எந்த இடத்தில் பொதுஅமைதிக்கு பங்கம் ஏற்படக்கூடும் என்று கருதப்படுகிறதோ அந்த இடத்தில் உள்ள செயல்துறை நடுவர் அல்லது அப்படிப் பொது அமைதிக்குப் பங்கம்விளைவிக்கக் கூடியவர் என்று கருதப்படும் நபர் வசிக்கும் பிரதேசத்துக்கு வரம்புடைய செயல்துறை நடுவர் அல்லது அப்படிப்பங்கம் விளைவிக்கக் கூடிய தீங்கினை இழைக்கக்கூடிய நபர் உள்ள பிரதேசத்துக்கு வரம்புடைய செயல்துறை நடுவர் எடுக்கலாகும்.

## பிரிவு - 109

## சந்தேகப்படதக்க நபர்களிடமிருந்து நன்னடத்தைக்கான பிணை பெறுதல்:

நமது அதிகார வரம்புக்குள் உள்ள ஒரு வட்டாரத்தில் தன்னை ஒளிந்து மறைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்துக்கொண்டு ஒருவர் இருக்கிறார் மற்றும் அவர் கைது செய்வதற்குரிய குற்றம் ஒன்றினை புரிவதற்காக அப்படி மறைந்திருக்கிறார் என்று நம்பத் தகுந்த இடத்து ஒரு செயல்துறை நடுவர் அத்தகைய நபரிடமிருந்து ஒரு ஆண்டுக்கு மிகாமல் தமது இஷ்டம் போல் பிணையுடன் (அ) பிணையின்றி ஒரு கடப்பாட்டு ஆவணத்தினை இயற்றி தருமாறு ஏன் கோரப்படலாகாது என்பதற்குரிய காரணம் கேட்கலாம். அப்படிக் கேட்பது இதற்கு பின் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கவேண்டும் அத்தகைய கடப்பாட்டு ஆவணம் நன்னடத்தை உடையவராக இருப்பதற்கு செயல்படுத்தப்படுவதாகும்.

## பிரிவு - 110

## வழக்கமாக குற்றங்களை புரிவோரிடமிருந்து நன்னடத்தைக்கான பிணை பெறுதல்:

தமது வட்டார வரம்புக்குள் இருக்கும் ஒரு நபரைப்பற்றி ஒரு செயல்துறை நடுவருக்கு அந்த நபர்,

அ) கொள்ளையடிப்பதை, போலி கையொப்பம் இடுவதை அல்லது வீடு புகுந்து களவாடுதலை அல்லது திருடுவதை வழக்கமாக கொண்டிருப்பவர் அல்லது;

ஆ) களவாடப்பட்டவை என்று அறிந்திருந்தும் திருட்டுச் சொத்துக்களை பெற்றுக் கொள்வதை வழக்கமாக கொண்டவர் ;

இ) திருடர்களுக்கு எப்பொழுதும் புகலிடம் தருபவர், பாதுகாப்பு தருபவர் அல்லது திருடப்பட்ட சொத்துக்களை மறைத்து வைப்பதற்கும் விற்பதற்கும் உதவி செய்பவர் அல்லது;

ஈ) சிறுவர் சிறுமியரை கடத்தி செல்லல் மிரட்டி பணம் பறித்தல், மோசடி செய்தல் இந்திய தண்டனைச் சட்டத்தில் 12-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்ட குற்றங்களைப் புரிதல் தீங்கிழைத்தல் அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தின் 489 A 489 B / 489C அல்லது 489D ஆகிய பிரிவுகளில் கூறப்பட்ட குற்றங்களைப் புரிதல் அல்லது மேற்கூறிய குற்றங்களுக்கு உடந்தையாக இருத்தல் அல்லது இந்த குற்றங்களை புரிய முயற்சி செய்தல் அல்லது இந்த குற்றங்கள் புரிவதை ஒரு வழக்கமாக கொண்டிருப்பவர் அல்லது;

உ) பொதுஅமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய குற்றங்கள் புரிவதை உடந்தையாக இருப்பதை இந்த குற்றங்கள் புரிய முயற்சி செய்வதை வழக்கமாக கொண்டவர்.

ஊ) கீழே சொல்லப்பட்ட குற்றங்கள் புரிவதை, குற்றங்கள்புரிய முயற்சி செய்வதை அவற்றிற்கு உடந்தையாக இருப்பதை வழக்கமாக கொண்டுள்ளார் அதாவது;

1. கீழே கூறப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சட்டங்களிள்படி குற்றமாக கொள்ளவேண்டியவை,-

அ) மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் 1940 (The Drugs and Cosmetics Act, 1940) (1940-ன் 23-வது சட்டம்)

ஆ) அந்நியச் செலவாணி கட்டுப்பாட்டுச் சட்டம் 1947 (7-வது சட்டம்) (The Foreign Exchange Regulation Act, 1947)

இ) தொழிலாளர் காப்புநிதிச் சட்டம் 1952 (19-வது சட்டம்) (The Employee's Provident Funds Act, 1952)

ஈ) அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் 1955 (10-வது சட்டம்) (Essential Commodities Act, 1955)

உ) உணவு கலப்பட தடைச் சட்டம் 1954 (37-வது சட்டம்) (The Prevention of Food Adulteration Act, 1954)

ஊ) தீண்டாமை ஒழிப்புச் சட்டம் 1955 (22-வது சட்டம்) (Protection of Civil Rights Act 1955)

எ) சுங்கச் சட்டம் 1962 (52-வது சட்டம்) (The Customs Act, 1962)

2. பதுக்கிவைத்தல், கள்ளச்சந்தையில் விற்றல், உணவு மருந்து கலப்படம் செய்தல், லஞ்சம் ஆகியவை தடுப்புப்பற்றி உருவாக்கப்பட்டுள்ள மற்ற சட்டங்களின்படி குற்றம் என கொள்ளத்தக்கவை அல்லது.

மிகவும் கொடியவர் துணிச்சல்காரர் என்றும் அவரைக் கட்டுக்காவல் இல்லாமல் விட்டு வைத்திருப்பது சமூகத்திற்கு பலத்தகேடு விளைவிக்கக்கூடும் என்று கொள்ளத் தக்கவர் என்ற தகவலை பெற்றவுடன் அந்த செயல்துறை நடுவர் இதன் பின்னர் கூறியுள்ளபடி தனது உசிதம் போல ஆனால் 3 ஆண்டுகளுக்கு மிகாமல் பிணையுடன் அல்லது பிணையின்றி நன்னடத்தைக்காக ஒரு கடப்பாட்டு ஆவணம் இயற்றி தருமாறு ஏன் கேட்கப்படக்கூடாது என்பதற்கான காரணம் காட்டுமாறு அவருக்கு உத்தரவிடலாம்.

## அத்தியாயம் - 10

பிரிவு - 129

## பொது அமைதி மற்றும் அமைதி காப்பது பற்றி:

1. சட்ட விரோதமான கூட்டத்தை அல்லது பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய 5 அல்லது அதற்கு மேற்பட்டவர் சேர்ந்துள்ள ஒரு கூட்டத்தை கலைந்து செல்லுமாறு ஒரு செயல்துறை நடுவர் அல்லது ஒரு காவல் நியைத்தின் பொறுப்பில் உள்ள அலுவலர் அல்லது அத்தகைய அலுவலர் இல்லாத போது உதவி-ஆய்வாளர் நிலைக்கு தாழ்வில்லாத ஒரு காவல் அலுவலர் உத்தரவிடலாம். அப்படி, உத்தரவிடப்பட்டதும் அந்தக்கூட்டத்தில் இருப்பவர்கள் யாவரும் கலைந்து செல்லவேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

2. அப்படி, உத்தரவிடப்பட்டபின் அத்தகைய கூட்டம் கலைந்து செல்லாதிருப்பின் அல்லது அங்கிருந்து கலைந்து செல்வதற்கான உத்தேசமின்றி உறுதியோடியிருப்பின் 1-வது கிளைக்கூற்றில் குறிப்பிட்டுள்ள எந்த செயல்துறை நடுவரும் அல்லது காவல் அலுவலரும் அந்த கூட்டத்தை வன்முறையைப் பயன்படுத்தி கலைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம். அதற்காகப் படைப்பிரிவைச் சார்ந்திராத எந்த நபரையும் அந்தக் கூட்டத்தைக் கலைக்க உதவி செய்யுமாறு கேட்கலாம். தேவைப்பட்டால் அந்த கூட்டத்தில் இருப்பவர்களை அப்படிக் கலைந்து செல்லும் பொருட்டும் கைது செய்து காவலில் வைக்கலாம்.

பிரிவு - 144

## ஒழுங்கீனம் அபாயம் பற்றிச் செயல்படுதல்:

1. ஒரு மாவட்ட செயல்துறை நடுவர் அல்லது ஒரு வட்டார செயல்துறை நடுவர் அல்லது அதற்கென மாநில அரசால் சிறப்பான அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு செயல்துறை நடுவர் இந்த பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று கருதினால் மற்றும் அவசரமான நடவடிக்கை அல்லது விரைந்து தடை செய்தல் அவசியம் என கருதினால் அந்த செயல்துறை நடுவர் அது சம்பந்தமான முக்கிய சங்கதிகளை குறிப்பிடும் எழுத்து மூலமான உத்தரவு ஒன்றினை 134-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளபடி சார்வு செய்தவன் மூலம் எந்த நபரையும் ஒரு குறிப்பிட்ட செயலை புரியாதிருக்கும்படியும் அல்லது தனக்கு சொந்தமான அல்லது தனது ஆளுகையில் ஒரு சொத்தினை பற்றி ஒரு குறிப்பிட்ட உத்தரவை ஏற்கும்படியும் செய்யலாம். அப்படி உத்தரவிடும் போது அத்தகைய உத்தரவின்மூலம் பொது அமைதியை காக்க கலவரத்தை தடுக்க மனித உயிர், சுகாதாரம் அல்லது பாதுகாப்புக்கு ஏற்படிக் கூடிய அபாயத்தை தடுக்க அல்லது சட்டப்படி பணியாற்றும் ஒருவருக்கு தீங்கு, தொல்லை, தடை ஏற்படாமல் தடுப்பதற்கும், தடுக்க முயற்சி செய்வதற்கும் முடியும் என்ற கருத்து தோன்றும்போது அந்த நடுவர் அத்தகைய உத்தரவினைப் பிறப்பிக்கலாம்.

2. நெருக்கடியான நேரங்களிலும் அத்தகைய உத்தரவை குறித்த காலத்தில் சம்மந்தப்பட்ட நபருக்கு சார்வு செய்ய இயலாத சூழ்நிலைகளிலும் அத்தகைய உத்தரவு ஒருதலைப்பட்சமாக பிறப்பிக்கப்படலாம்.

3. இந்தப் பிரிவின்கீழ் வரும் உத்தரவை ஒரு குறிப்பிட்ட நபருக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட இடம் அல்லது பகுதியில் வசிக்கும் நபர்களுக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட இடம் அல்லது அங்கு அடிக்கடி வரக்கூடிய பொதுமக்கள் அனைவருக்கும் பிறப்பிக்கலாம்.

4. இந்தப் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவும் பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குமேல் அமுலில் இருக்கக்கூடாது. ஆனல் மனித உயிருக்கும், நல்வாழ்வுக்கும்,

பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படுவதைத் தவிர்க்கவும் கலவரம் ஆகியவற்றைத் தடுக்கவும் அவசியம் என்று கருதினால் மாநில அரசு அந்த நடுவரால் பிறப்பிக்கப்பட்ட அத்தகைய உத்தரவை ஓர் அறிவிக்கையின் மூலம் மற்றும் ஒரு காலத்துக்கு நீடித்து அமுலில் இருக்கும் எனக்கூறலாம். அந்த அறிவிக்கைப்படி அந்தச் செயல்துறை நடுவர் பிறப்பித்த உத்தரவின் காலக்கெடு முடிவடையும் நாளிலிருந்து அந்த உத்தரவு நீடித்து அமல் செய்யப்படும் காலவரையறை 6 மாதங்களுக்கு மேற்படலாகாது.

5. இந்தப் பிரிவின கீழ் தம்மால் அல்லது தம் பதவியில் இருந்த முன்னவரால் அல்லது தமக்குக் கீழுள்ள மற்றொரு நடுவரால் பிறப்பிக்கபட்ட உத்தரவை தாமே வலிந்தும் அல்லது அதனால் பாதிக்கப்பட்டவரால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை ஏற்றும் ஒரு நடுவர் அந்த உத்தரவை ரத்துச்செய்யலாம், அல்லது மாற்றியமைக்கலாம்.

6. மாநில அரசு தம்மால் 4-வது கிளைக் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவையும் தானே வலிந்து முன் வந்து அல்லது அதனால் பாதிக்கப்பட்டவருடைய மனுவை ஏற்றும் ரத்துசெய்ய மாற்றி அமைக்கக்கூடும்.

7. 5-வது கிளைக்கூறின்படி அல்லது 6-வது கிளைக்கூறின்படிசெய்யப்பட்டுள்ள மனுவைப் பெற்றவுடன் சம்மந்தப்பட்ட செயல்துறை நடுவர் அல்லது மாநில அரசு அப்படி மனுச்செய்து கொண்டவரைக் குறுகிய காலத்தில் அந்த உத்தரவுக்கெதிரான காரணங்களைக் காட்டுவதற்காக நேரிலாவது வாதுறைஞர் மூலமாகவாவது தன் முன்னர் வருகை தரும்படி செய்ய வேண்டும். அந்த உத்தரவினை அந்த நடுவர் அல்லது மாநில அரசு முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கும்போது அதற்குரிய காரணங்களை எழுத்தில் வடிக்க வேண்டும்.

## பிரிவு -145

## அசையாத சொத்துக்கள் பற்றிய பிரச்சனைகள் நிலம் அல்லது தண்ணீர் பற்றி வறுகின்ற பிரச்சனைகள் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் நிலை:

1. தமது வரம்புக்குள் உள்ள ஒரு நிலம் அல்லது தண்ணீர் அல்லது அதன் எல்லைகள் பற்றிய பிரச்சனையொன்று பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடும் என்பது பற்றிய தகவலை அல்லது காவல் அலுவலரின் அறிக்கையைப் பெற்ற ஒரு செயல் துறை நடுவர் அதுபற்றி அத்தகைய எண்ணம் கொள்ளும்போது அவர் அப்படி தாம் கருதுவதற்கேற்ற காரணங்களை எழுத்தில் வடித்த பின்னர், அந்த பிரச்சனையில் ஈடுபட்டுள்ள தரப்பினரைத் தமது மன்றத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு நேரிலாவது அல்லது வாதுறைஞர் மூலமாகவாவது வருகைதந்து அந்த பிரச்சனையில் உள்ள சொத்து எவருடைய ஆளுகைக்கு உட்பட்டது என்பது பற்றி எழுத்து மூலமான தங்கள் வாக்குமூலத்தை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடவேண்டும்.

2. இந்தப் பிரிவுக்காக நிலம் அல்லது நீர் என்ற சொல் கட்டடங்களையும் சந்தைக் கடைகளையும் பயிர் அல்லது வேறு விளைச்சல் நிலங்களையும் மீன் பிடிப்புத் துறைகளையும் குறிக்கும்.

3. அழைப்பாணைகளைச் சார்வு செய்வதற்காக இந்தச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி அந்த நடுவர் குறிப்பிடும் நபர் அல்லது நபர்களிடம் அந்த உத்தரவில் நகல் சார்வு செய்யப்படவேண்டும், அதில் ஒரு நகலாவது பிரச்சனையில் சம்மந்தப்பட்ட பொருள் உள்ள இடம் அல்லது இடத்தின் அருகாமையில் யாவரும் பார்க்கக்கூடிய ஓர் இடத்தில் ஒட்டப்படுவதன் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

4. உரிமை கொண்டாடும் தரப்பினரின் தகுதிகளையும் கொண்டாடும் உரிமைகளையும் பற்றிக்கவலைப்படாது அவர்கள் சமர்ப்பித்துள்ள எழுத்துமூலமாக, வாக்கு மூலங்களைப் பார்த்து

அவர்களை ஏற்றுக் கொண்டு தான் தேவையென்று கருதுகின்ற பிரச்சனையில் உள்ள சொத்து தாம் (1) வது கிளைக்கூறின்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளில் தரப்பினரின் எவருடைய வசத்திலாவது இருந்தால் அல்லது எவருடைய வசத்தில் இருந்தது என்பது பற்றி முடிவெடுக்கவேண்டும்.

ஆனால் காவல் அலுவலர் அறிக்கை சமர்ப்பித்த அல்லது தனக்கு அதுபற்றி தகவல் கிடைத்த நாளுக்கு முந்தைய இரண்டு மாதங்களுக்குள்ளாவது அல்லது 1-வது கிளைக்கூறின் உத்தரவுக்கு முன்பு அல்லது பின்பு எவர் வசத்திலிருந்தாவது அந்தச்சொத்து வன்முறையாகவும் சட்ட விரோதமாகவும் பறிக்கப்பட்டுள்ளது என்று தோன்றும்போது அந்த நடுவர் அப்படி அந்தச் சொத்தைப் பறிகொடுத்தவரை 1-வது கிளைக்கூறின்படி தாம் உத்தரவைப் பிறப்பித்த நாளில் அதன் ஆளுகைக்குரியவராகக் கொள்ளக்கூடும்.

5. இந்தப்பிரிவில் சொல்லப்பட்ட எதுவும் வருகை தருமாறு எந்த தரப்பினரையும் அல்லது அதில் அக்கறையுள்ள எந்த நபரையும் முன்கூறியபடி எத்தகைய பிரச்சனையும் இல்லை அல்லது நிலவியிருக்கவில்லை என்று காட்டுவதினின்றும் தடுப்பதாகக் கொள்ளக் கூடாது. அத்தகைய நிலைகளில் அந்த நடுவர் தம் உத்தரவை ரத்து செய்யவேண்டும் மற்றும் அது பற்றி வேறு நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்த வேண்டும். அப்படி ரத்து செய்வதற்கு உட்பட்டு அந்த நடுவர் 1-வது கிளைக்கூறின்படி வழங்கிய உத்தரவு இறுதியானதாகும்..

**6. அ)** 4-வது கிளைக்கூறின் கீழ் விளக்கியுள்ளபடி தரப்பினரின் ஒருவர் அத்தகைய சொத்தின் ஆளுகைக்குரியவராக இருந்தார் அல்லது அப்படி இருந்திருக்க வேண்டும் என்று அந்த நடுவர் முடிவு செய்தால் சட்டப்படி வெளியேற்றப்படும் வரையில் அத்தகைய தரப்பினரின் ஆளுகையில் அந்தச் சொத்து இருக்கவேண்டும் என்ற அறிவிக்க வேண்டும், 4-வது கிளைக்கூறின் விளக்கத்தில் குறிப்பிட்டபடி அவர் செயல்படும் போது அந்த சொத்தினை அப்படி வன்முறையாகவும் சட்ட விரோதமாகவும் வெளியேற்றப்பட்டவரிடம் ஒப்படைக்கலாம்..

**ஆ)** இந்தக் கிளைக்கூறின்படி பிறப்பிக்கப்படும் உத்தரவை (3) — வது கிளைக்கூறில் குறிப்பிட்டுள்ளபடி சார்வு செய்யவேண்டும் மற்றும் வெளியிடவேண்டும்.

7. அத்தகைய நடவடிக்கைக்குரிய தரப்பினரில் ஒருவர் மரணமடைந்தால் அந்தநடுவர் இறந்தவரின் சட்டபூர்வமான வாரிசை அந்த நடவடிக்கைக்கு ஒரு தரப்பாக சேர்த்துக்கொண்டு தமது விசாரணையைத் தொடர்ந்து நடத்தலாம். அவர் அத்தகைய வாரிசு உரிமை கொண்டாடுகின்றவர்கள் அனைவரையும் அத்தகைய தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ளலாம்.

8. இந்தப்பிரிவின் கீழ் நடவடிக்கைக்கு ஆட்படுத்தப்பட்ட பொருள், பயிர் அல்லது வேறு விளைச்சலாகும் தன்மையை உடையதாகவும் இருக்கிறது என்று கருதும்போது அந்த நடுவர் அதனை சரியான பொறுப்பில் ஒப்படைக்க அல்லது விற்று முதலாக்க உத்தரவிடலாம், தனது விசாரணை முடிந்த பின்னர் அத்தகைய பொருளை அல்லது அதன் விற்பனை மற்றும் முதலீட்டை என்ன செய்வது என்பது பற்றித் தமக்கு சரியெனப்படும் உத்தரவை விடுப்பார்.

9. அந்த நடுவர் தமக்குச் சரியெனப்படும்போது இந்தப் பிரிவின்படியுள்ள அந்த நடவடிக்கையின் எந்த கட்டத்திலும் தரப்பினர் எவருடைய வேண்டுதலின் பேரிலும் ஒருவரைச் சாட்சி கூற வருமாறு அல்லது ஓர் ஆவணம் அல்லது பொருளைக் கொண்டு வருமாறு அழைப்பாணை விடுவிக்கலாம்.

10. இந்தப் பிரிவில் கூறப்பட்டவை எதையும் 107 — வது பிரிவின் கீழ் ஒரு குற்றவியல் நடுவர் எடுக்கத்தக்க நடவடிக்கை எதற்கும் மாறானதாக கொள்ளக்கூடாது.

## அத்தியாயம் - 11

### காவல் துறையினரின் தடுப்பு நடவடிக்கைகள்

பிரிவு - 149

கைது செய்வற்குரிய எந்த குற்றமும் நடைபெறாமல் தடுப்பதற்காக ஒவ்வொரு காவல் அலுவலரும் தலையிட்டு அந்தக் குற்றம் நடைபெறாது தடுப்பதற்காகத் தம் முழுத்திறமையையும் காட்டி செயல்படவேண்டும்

பிரிவு - 150

கைது செய்வதற்குரிய குற்றம் புரிவதற்கான திட்டம் இருக்கிறது என்று தகவல் பெறும் ஒவ்வொரு காவல் அலுவலரும் உடனடியாக, தாம் எந்தக் காவல் அலுவலருக்கு கீழ்படிந்து பணியாற்றகிறாரோ அந்த காவல் அலுவலருக்கும் மற்றும் அத்தகைய குற்றம் நடைபெறாமல் தடுப்பதற்கும் அதைப்பற்றி உடனடி நடவடிக்கை எடுக்கத்தக்கவரும் ஆகிய கடமையுடைய மற்றக் காவல் அலுவலருக்கும் அது பற்றிய தகவலை அளிக்கவேண்டும்.

பிரிவு - 151

1. கைது செய்வதற்குரிய குற்றம் புரிவதற்கான திட்டம் இருப்பதை அறிந்த ஒருகாவல் அலுவலர் ஒரு குற்றவியல் நடுவரின் உத்தரவின்றி மற்றும் பிடியாணையின்றி கைது செய்தாலன்றி அந்தக் குற்றத்தைத் தடுக்க முடியாது என்று தமக்குத் தோன்றும்போது அத்தகைய எண்ணம் உடையவரைக் கைதுசெய்யலாம்.

2. 1-வது கிளைக்கூறின்படி கைது செய்யப்பட்ட எவரையும் தடுத்துக் காவலில் நீடிப்பது அவசியம் என்றாலன்றி அதற்கான அதிகாரம் இந்த சட்டத்தின்படி கொடுக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது அமலில் உள்ள வேறு எந்தச் சட்டப்படியாவது அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலன்றி அவரைக் கைது செய்த நேரத்திலிருந்து 24 மணி நேரத்துக்கு மேல் காவலில் வைத்திருக்கக்கூடாது.

பிரிவு - 152

தம்முடைய முன்னிலையில் நிலைபெற்ற அல்லது நிலைபெறாத பொதுச்சொத்துக்கு தீங்கிழைக்கச் செய்யப்படும் எந்த முயற்சியையும் அல்லது கப்பல் போக்குவரத்துக்கென குறிக்கப்பட்டுள்ள அடையாளங்கள் அல்லது மிதவைகள் அல்லது எல்லைக்குறிகள் போன்றவற்றை அகற்றுவதற்கென செய்யப்படும் எத்தகைய முயற்சியையும் தடுப்பதற்காக தம் அதிகாரத்தை ஒரு காவல் அலுவலர் பயன்படுத்தலாம்.

## அத்தியாயம் - 12

## காவல் துறைக்கு கொடுக்கப்படும் தகவலும் அதனைப் புலனாய்வு செய்வது பற்றிய அவர்களது அதிகாரமும்

பிரிவு - 154

### கைது செய்வற்குரிய வழக்குகளின் தகவல்:

1. கைது செய்வதற்குரிய ஒரு குற்றத்தைப்பற்றித் தரப்படும் ஒவ்வொரு தகவலும் தம்மிடம் வாய்மொழியாக அளிக்கப்படும்போது ஒரு காவல் நிலைய பொறுப்பிலுள்ள ஒரு காவல் அலுவலர் அதனைச் சுருக்கமாக எழுத்தில் வடித்து அல்லது அப்படிச் செய்யும்படி செய்து அதனைத் தகவல் கொடுப்போருக்கு படித்துக்காட்ட வேண்டும். அத்தகைய தகவல் ஒவ்வொன்றும் எழுத்து மூலமாக

செய்யப்படினும் அல்லது எழுத்தில் சுருக்கி எழுதப்படினும் அதனைக் கொடுப்போரின் கையொப்பம் பெறப்படவேண்டும். அதன் சாராம்சத்தை அதற்கென மாநில அரசு வகுத்திருக்கும் படிவத்தில் அத்தகைய அலுவலர் வைத்திருக்கும் புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும்.

2. 1-வது கிளைக்கூறில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவலின் நகலை அந்தத் தகவல் கொடுத்தோருக்குக் கட்டணம் ஏதுமின்றி வழங்க வேண்டும்.

3. 1-வது கிளைக்கூறில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு காவல் நிலையப் பொறுப்பிலுள்ள அலுவலர் அந்த தகவலை ஏற்க மறுத்தால் பாதிக்கப்பட்ட எந்த நபரும் அத்தகைய தகவலின் சாராம்சத்தை எழுத்து மூலமாகவும் அஞ்சல் வழியாகவும் சம்பந்தப்பட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பலாம். அவர் அந்தத் தகவலை கைது செய்வதற்குரிய ஒரு குற்றம் புரியப்பட்டிருப்பதை வெளிப்படுத்துகிறது என்று கருதினால் அதனை தாமே புலனாய்வு செய்யவேண்டும், அல்லது தமக்கு கீழ் பணியாற்றும் ஒரு காவல் அலுவலரைப் புலனாய்வு செய்யுமாறு பணிக்கவேண்டும். அத்தகைய புலனாய்வு இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளபடி நடத்தப்படவேண்டும். மற்றும் அத்தகைய அலுவலருக்கு அந்தக் குற்றத்தைப் பற்றி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒரு காவல் நிலைய பொறுப்பில் உள்ள அலுவலருக்கு உள்ள அதிகாரங்கள் அனைத்தும் உண்டு.

பிரிவு - 155

## கைது செய்வதற்குரியதல்லாத குற்றங்களும் அவற்றின் புலனாய்வும்:

1. கைது செய்வதற்குரியதல்லாத ஒரு குற்றம் தமது காவல் நிலைய வரம்புக்குள் நடைபெற்றிருப்பதாக அந்த காவல் நிலைய பொறுப்பிலுள்ள அலுவலருக்கு தகவல் கொடுக்கப்படும்போது அதன் சாராம்சத்தை அதற்கென மாநில அரசு விதித்துள்ள படிவத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் பதிவு செய்வதுடன் அப்படி தகவல் கொடுப்பவரை ஒரு குற்றவியல் நடுவரிடம் அனுப்பவேண்டும்.

2. கைது செய்வதற்குரியதல்லாத ஒரு குற்றத்தை அதனை விசாரிக்கும் அதிகாரம் பெற்று அல்லது விசாரணைக்கு அனுப்பும் அதிகாரம் பெற்ற ஒரு குற்றவியல் நடுவரின் ஆணையின்றி எந்த காவல் அலுவலரும் புலனாய்வு செய்யக்கூடாது.

3. அத்தகை ஆணையைப்பெறும் எந்தக் காவல் அலுவலரும் ஒரு கைது செய்வதற்குரிய குற்றத்தைப் புலனாய்வு செய்வதற்கு ஒரு காவல் நிலையம் பொறுப்பாளருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் (பிடியாணையின்றிக் கைது செய்யும் அதிகாரம் தவிர) செயல்படுத்தலாம்.

4. ஒரு வழக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குற்றங்களைப் புலப்படுத்தும் போது அவற்றில் ஒன்றாவது கைது செய்வதற்குரிய குற்றமாக இருக்கும்போது மற்றவை கைது செய்வதற்குரியதல்லாத குற்றங்களாக இருப்பினும் அந்த வழக்கினை கைது செய்வதற்குரிய குற்றவழக்காகவே கருதவேண்டும்.

பிரிவு -156

## கைது செய்வதற்குரிய குற்றத்தைப் புலனாய்வு செய்யும் அதிகாரம்:

1. எந்தக் காவல் நிலைய பொறுப்பிலுள்ள அலுவலரும் ஒரு குற்றவியல் நடுவரின் ஆணையின்றி தமது காவல் நிலைய வரம்புக்குள் வரும் பகுதியில் அதிகார வரம்புள்ள ஒரு நீதி

மன்றம் பதிமூன்றாவது அத்தியாயத்தின்படி பரிசீலனை செய்ய அல்லது விசாரிக்கத்தக்க அதிகாரம் பெற்ற அந்த கைது செய்வதற்குரிய குற்றத்தையும் புலனாய்வு செய்யலாம்.

2. அத்தகைய வழக்கில் ஒரு காவல் அலுவலர் மேற்கொண்ட எந்த நடவடிக்கையும் எந்த கட்டத்திலும் அந்த வழக்கினைப் புலனாய்வு செய்வதற்குரிய அதிகாரம் அவருக்கு இல்லை என்று காரணம் காட்டி கேள்வி கேட்கமுடியாது.

3. மேற்கூறியபடி ஒரு புலனாய்வு 190-வது பிரிவின்படி அதிகாரம் உள்ள எந்தக் குற்றவியல் நடுவரும் நடத்துமாறு ஆணையிடலாம்.

பிரிவு - 160

## சாட்சிகளை அழைப்பதற்குள்ள அதிகாரம்:

1. இந்த அத்தியாயத்தின்படி புலனாய்வு மேற்கொள்ளும் எந்தக் காவல் அலுவலரும் அந்த வழக்கின் சங்கதிகளையும் சூழ்நிலைகளையும் பற்றி அறிந்துள்ளதாக தமக்கு வந்துள்ள தகவலின்படி அல்லது வேறு எவ்விதமாகவும் தோன்றினால் அத்தகைய நபர் தமது அல்லது அருகிலுள்ள காவல் நிலைய வரம்புக்குள் இருப்பின் தன்முன்னர் வருகை தருமாறு எழுத்து மூலமாக உத்தரவிடலாம். அத்தகைய நபர் அப்படிக்கேட்டு கொண்டுள்ளபடி வருகை தரவேண்டும்.

ஆனால் பதினெட்டு வயதுக்கு குறைந்த ஆணையும் அல்லது எந்த பெண்ணையும் அத்தகையோர் குடியிருக்கும் இடத்தைத் தவிர வேறு எந்த இடத்துக்கும் வருகை தருமாறு கேட்கலாகாது.

2. தாம் குடியிருக்கும் இடம் இல்லாத வேறு இடத்திற்கு 1-வது கிளைக்கூறின்படி வருகைதரும் ஒவ்வொரு நபருக்கும் அவர்களுக்குரிய நியாயமான செலவினங்களை அந்த காவல் அலுவலர் தருவதற்காக அதற்கென மாநில அரசு விதிமுறைகளை வகுக்கலாம்..

பிரிவு -163

## ஆசை காட்டக்கூடாது:

1. இந்திய சாட்சிய சட்டத்தின் 24-வது பிரிவில் கூறப்பட்டபடி எத்தகைய உறுதியினை அல்லது அச்சுறுத்தலை அல்லது தூண்டுதலை எந்தக் காவல் அலுவலர் அல்லது அதிகாரத்தில் உள்ள வேறெந்த நபரும் அளிக்கக்கூடாது அல்லது உண்டாக்கக்கூடாது; அளிக்கும்படியும் அல்லது உண்டாக்கும்படியும் செய்யக்கூடாது.

2. ஆனால் இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளபடி புலனாய்வில் தன்னிச்சையாக முன்வந்து வாக்குமூலம் அளிக்கும் எவரையும் எந்த எச்சரிக்கை மூலமாவது அல்லது வேறு எவ்விதமாக வேணும் எந்தக் காவல் அலுவலரும் அல்லது வேறெந்த நபரும் தடுக்கக்கூடாது.

3. 164-வது பிரிவின் 4-வது கிளைக்கூறில் வரும் எதனையும் இந்தச் கிளைச்கூறில் உள்ளவை பாதிக்காது.

பிரிவு - 171

## புகார் கொடுத்தவரும் சாட்சிகளும் காவல் அலுவலரைத் துணை கொள்ளாமை:

ஒரு நீதிமன்றத்துக்குச் செல்லுகின்ற சாட்சி அல்லது புகார் கொடுத்தவர் ஒரு காவல் அலுவலருடன் செல்லவேண்டும் என்று கேட்கப்படலாகாது. அவர்களுக்கு தேவையில்லாத கட்டுப்பாடு அல்லது நலக்குறைவு உண்டாக்கப்படலாகாது. மற்றும் அவர்கள் நீதி மன்றத்துக்கு வருவதற்காகவென்று

அவர்களால் இயற்றப்படும் ஆவணத்தைத்தவிர, கட்டுப்பாடு எதுவும் விதிக்கக் கூடாது. ஆனால் அத்தகைய புகார் கொடுத்தவர் அல்லது சாட்சி அப்படி நீதி மன்றத்துக்கு வருகை தர மறுத்தாலும் அல்லது 170—வது பிரிவில் கூறியுள்ளபடி கடப்பாடு ஆவணம் எதனையும் எழுதித்தர மறுத்தாலும், அவரைக் காவலுடன் அந்த குற்றவியல் நடுவரிடம் அந்தக் காவல் நிலைய பொறுப்பிலுள்ள அலுவலர் அனுப்ப வேண்டும். அப்படி அவர் அத்தகைய ஆவணத்தை இயற்றித் தரும் வரையில் அல்லது அந்த வழக்கு முடியும்வரையில், அந்த நடுவர் அவரைக் காவலில் வைத்திருக்கலாம்.

பிரிவு -174

## தற்கொலை முதலியன பற்றி விசாரித்து அறிக்கை தருவது பற்றிய காவலர் பொறுப்பு:

1. ஒரு காவல் நிலைய பொறுப்பிலுள்ள அலுவலர் அல்லது அதற்கென மாநில அரசால் சிறப்பான அதிகாரம் வழங்கப்பெற்றுள்ள வேறு காவல் அலுவலர், ஒருவர் தற்கொலை செய்து கொண்டால் அல்லது மற்றொருவரால் அல்லது மிருகத்தால், இயந்திரத்தால் அல்லது விபத்தால் மரணமுற்றால் அல்லது மற்றொருவர் ஒரு குற்றத்தினை புரிந்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கத்தக்க சூழ்நிலையில் மரணமுற்றார் என்ற தகவலை பெற்றதும் உடனடியாக வேறு எந்த விதமாக மாநில அரசு விதித்திருந்தாலன்றி அல்லது பொது அல்லது சிறப்பான உத்தரவின்படி மாவட்ட செயல்துறை நடுவர் அல்லது வட்டார செயல்துறை நடுவர் அப்படி விதித்திருந்தாலன்றி, அந்த பிணம் அல்லது மாண்டவரின் உடல் இருக்கும் இடத்திற்கு செல்லவேண்டும். அக்கம் பக்கத்திலுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெரியமனிதர்கள் முன்னிலையில் அது பற்றிய புலன்விசாரணை செய்து மரணத்திற்குரிய காரணத்தை உத்தேசமாக கவனிக்கவேண்டும். பிரேதத்தின்மேல் காணும் காயங்கள், எலும்பு முறிவுகள் சிராய்ப்புகள் மற்ற காயத்தின் அடையாளங்கள் ஆகியவற்றை குறித்துக் கொள்ளவேண்டும். எப்படி அல்லது எந்த ஆயுத்தால் அல்லது எந்த கருவியால் அக்காயங்கள் ஏற்பட்டு இருக்கக்கூடும் என்பதையும் குறித்துக்கொள்ள வேண்டும்.

2. அப்படி தயாரிக்கப்பட்ட அறிக்கையில் அந்த காவல் அலுவலரும், மற்ற நபர்களும் அல்லது அந்த அறிக்கைக்கு ஒப்புதல் தெரிவிக்கக்கூடிய பெரும்பான்மையான நபர்களும் கையொப்பமும் இட்டப்பின்னர், அதனை மாவட்ட செயல்துறை நடுவர் அல்லது வட்டார செயல்துறை நடுவருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

3. மரணத்தின் காரணத்தைப்பற்றி சந்தேகம் ஏற்படும் போதும் அல்லது வேறு எந்த காரணத்திற்காகவாவது அப்படி செய்வது அவசியம் என்று அந்த காவல் அலுவலர் கருதும் போதும் அதற்கென மாநில அரசு விதித்திருக்கும் விதிகளுக்கு உட்பட்டு, அந்த உடலை பரிசோதித்து பார்ப்பதற்காக அருகாமையிலுள்ள அறுவை மருத்துவருக்கு அல்லது அதற்கென மாநில அரசு நியமித்திருக்கும் தேர்ச்சி பெற்ற மருத்துவருக்கு அந்த உடலை அனுப்பவேண்டும். அப்படி அனுப்பும்போது அது கடக்கப்படவேண்டிய தூரம், தட்ப வெட்ப நிலை ஆகியவற்றின் விளைவாக அந்த உடல் அழுகிப்போய் அத்தகைய பரிசோதனையை பயனற்றதாகி விடக்கூடும் என்ற அபாயம் ஏற்படாத நிலையில் அதனை அப்படியே பாதுகாத்து அனுப்புதல்வேண்டும்.

4. ஒரு மாவட்ட குற்றவியல் நடுவர் அல்லது வட்டார நீதித்துறை நடுவர் மற்றும் அதற்கென மாநில அரசால் அதிகாரம் வழங்கப் பெற்றுள்ள செயல்துறை நடுவர் அல்லது மாவட்ட குற்றவியல் நடுவர் ஆகியோர் பிரேத விசாரணை நடத்துவதற்கு அதிகாரம் பெற்றவராவர்.

பிரிவு - 175

1. 174-வது பிரிவின்படி செயல்படும் ஒரு காவல் அலுவலர் எழுத்துமூலமான உத்தரவின் மூலம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மேற்கூறிய நபர்களை அத்தகைய புலனாய்வுக்காக அழைப்பாணை விடுக்கலாம். அதே போன்று அந்த வழக்கின் விவரங்களை அறிந்திருப்பதாகத் தோன்றும் வேறு

நபரையும் அவ்வாறு அழைக்கலாம். அப்படி அழைக்கப்பட்டவர் ஒவ்வொருவரும் அங்கே வருகை தந்து அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு உண்மையாகவும் ஒழுங்காகவும் பதில் கூறவேண்டும். அப்படி சொல்லப்படும் பதில் அவரை ஒரு குற்றச்சாட்டுக்கு தண்டனை அல்லது அவரது சொத்தைப் பறிமுதல் செய்யப்படுவதற்கு உரியதாக இருக்கும்போது, அவர் அத்தகைய கேள்விக்குரிய பதிலைச்சொல்லத் தேவையில்லை.

2. 170-வது பிரிவு இயங்கத்தக்கதான ஒரு கைது செய்வதற்குரிய குற்றம் எதனையும் அந்த சங்கதிகள் வெளிப்படுத்தவில்லை எனில் அத்தகைய நபர்களை ஒரு குற்றவியல் நடுவர் மன்றத்திற்கு வருகைதருமாறு அந்த காவல் அலுவலர் வேண்டத்தேவையில்லை.

## அத்தியாயம் - 33

### பிணையில் விடத்தக்கன

பிரிவு - 436

1. பிணையில் விடத்தகாத குற்றமின்றி வேறு குற்றத்திற்காக குற்றம்சாட்டப்பட்ட நபர், பிடியாணையின்றி ஒரு காவல் நிலைய பொறுப்பாளரால் கைது செய்யப்பட்டாலும், ஒரு நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டாலும் அல்லது கொண்டு வரப்பட்டாலும் அந்த நபர் அந்த காவல் அலுவலரிடம் அல்லது அந்த நீதி மன்றத்தின் பிணைஅளிக்க உறுதியாக இருக்கும் எந்த கட்டத்திலும், அத்தகைய நபரை பிணையில் விடுவிக்கவேண்டும்.

எனினும் அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றம் தக்கதென கருதும்இடத்து, அவரிடம் பிணை ஏற்பதற்கு பதிலாக தாம் முன்னிலைபடுவதற்கு கீழ்க்கண்டபடி ஒத்துக்கொண்டு எழுதிதரும் ஆவணத்தின் பேரில் அவரை விடுவிக்கலாம், மற்றும் இந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ளவை எவையும் 116-வது பிரிவின் 3-வது கிளைக்கூறில் உள்ளவற்றை பாதிக்காது.

2. 1-வது கிளைச்கூறில் என்ன கூறியிருப்பினும் தாம் வருகைதர வேண்டிய விதம் மற்றும் நேரம் பற்றி பிணை ஆவணத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைபடி நடக்கத் தவறினால் அத்தகைய நபர் அதற்கு பிறகு அதே வழக்கில் நீதிமன்றத்திற்கு வருகை தந்தால், அவரை அந்த நீதி மன்றம் பிணையில் விடுவிக்க மறுக்கலாம். அப்படி மறுப்பதால் பிணை ஆவணத்தில் கடப்பாடுடைய எந்த நபரையும் அதற்குரிய தண்டனைத் தொகையை 446-வது பிரிவின்படி அந்த நீதிமன்றம் கேட்பதற்குரிய அதிகாரம் உள்ளது.

பிரிவு - 437

**பிணையில் விடக்தகாத குற்றங்களில் பிணையில் விடுதல்:**

1. பிணையில் விடத்தகாத குற்றத்தை புரிந்த அல்லது புரிந்ததாக சந்தேகப்படத்தக்க எதிரியை பிடியாணையின்றி ஒரு காவல் நிலைய பொறுப்பாளர் கைது செய்து காவலில் வைத்திருந்தாலும் அல்லது ஒரு நீதிமன்றத்திற்கு வருகை தந்தாலும் அல்லது கொண்டுவரப்பட்டாலும், அந்த நீதிமன்றம் உயர்நீதி மன்றமாக அல்லது அமர்வு நீதிமன்றமாக இல்லாதபோது, அந்த நபரை பிணையில் விடுவிக்கலாம். ஆனால் அத்தகைய நபர் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கத்தக்க குற்றத்தைப் புரிந்துள்ளதாக நம்பத்தக்கவிடத்து அவரை அப்படி பிணையில் விடுவிக்கலாகாது.

எனினும் பதினெட்டு வயதுக்கு குறைந்த எந்த பெண்ணையும், நபரையும் நோய்வாய்ப்பட்ட அல்லது குறைபாடுள்ள நபரையும் அத்தகைய குற்றம்சாட்டப் பட்டிருக்கும்போது பிணையில் விடுவிக்கலாம்.

புலனாய்வின் போது சாட்சிகள் எதிரிகளை அடையாளம் காட்டவேண்டி இருக்கிறது என்ற காரணத்தை மட்டும்காட்டி அவரை பிணையில் விடக்கூடாது என்பது சரியல்ல. அவரை பிணையில் விடத்தக்க காரணம் இருக்கும்போது நீதிமன்றத்தின் அத்தகைய நெறிமுறைகளுக்கு தான் ஒத்துக்கொள்ள அவர் முன்வரும்போதும் அவரை பிணையில் விடவேண்டும்.

2. ஒரு புலனாய்வு பரிசீலனை அல்லது விசாரணையின் எந்த கட்டத்திலும் எதிரி கைது செய்வதற்குரிய குற்றத்தை புரிந்திருப்பார் என்ற நம்புவதற்கு ஏற்றகாரணம் எதுவும் இல்லை என்று அத்தகைய அலுவலர் அல்லது நீதி மன்றத்துக்கு தோன்றும் போதும் அது பற்றி இன்னும் பரிசீலனை செய்யப்பட வேண்டியிருக்கிறது என்று கொள்ளும்போது அத்தகைய பரிசீலனை முடிவடையும் வரையில் பிணையில் அந்த எதிரியை விடுவிக்கலாம். அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றத்தின் விருப்பம்போல் அவர் இதன்கீழ் கூறியுள்ளபடி முன்னிலைப்படுவதற்கான பிணையாளரின்றி ஒரு பிணைஆவணத்தை இயற்றித் தருமாறு கேட்கலாம்.

3. ஒரு நபர் 7 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கத்தக்க அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தின் 6–ஆம் அத்தியாயம், 16–ஆம் அத்தியாயம் அல்லது 17—ஆம் அத்தியாயம் ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள ஒரு குற்றத்தை அல்லது அத்தகைய குற்றம்புரிய சதிசெய்தல். உடந்தையாக இருத்தல், முயற்சிசெய்தல் ஆகியவற்றிற்காக குற்றம் சாட்டப்படும்போது அல்லது சந்தேகத்துக்குள்ளாகும்போது அவரை பிணையில் விடுக்கும் நீதி மன்றம்.–

அ) இந்த அத்தியாயத்தின்கீழ் இயற்றப்பட்ட பிணை ஆவணத்தின் நிபந்தனைகளின்படி அத்தகைய நபர் வருகைதருவதை உறுதிப்படுத்துவதற்காக; அல்லது

ஆ) அவர் புரிந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ள அல்லது புரிந்திருப்பதாக சந்தேகம் கொள்ளத்தக்க குற்றத்தைப் போன்ற ஒரு குற்றத்தை அவர் புரியாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக ; அல்லது

இ) நீதியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தாம் அவசியம் எனக்கருதும் எத்தகைய நிபந்தனையும் விதிக்கலாம்.

ஈ) (1) வது அல்லது (2) வது கிளைக்கூறின்படி ஒரு நபரை பிணையில் விடுக்கும் நீதிமன்றம் அல்லது அலுவலர் அதற்குரிய காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

உ) (1)வது அல்லது (2) வது கிளைக்கூறின்படி ஒரு நபரை பிணையில் விடுவித்துள்ள நீதிமன்றம் அப்படி செய்வது அவசியம் என்று கருதும்போது அவரைக் கைது செய்து காவலில் வைக்கவேண்டுமென்று உத்தரவிடலாம்.

ஊ) ஒரு குற்றவியல் நடுவரால் விசாரிக்கத்தக்க வழக்கில் எதிரி கைதுசெய்வதற்குரிய குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அந்த வழக்கில் சாட்சியம் எடுப்பதற்காக குறிக்கப்பட்ட முதல் நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் விசாரணை முடிவடையவில்லையெனில் அத்தகைய எதிரி அந்த காலம் முழுவதும் சிறைக்காவலில் இருந்தால் அவரைக் குற்றவியல் நடுவரின் விருப்பத்தை ஈடேற்றுவதற்குரிய பிணையில் விடுவிக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு இயலவில்லையெனில் அதற்குரிய காரணங்களை பதிவு செய்யவேண்டும்.

எ) ஒரு கைது செய்வதற்குரிய குற்றத்துக்கான எதிரியின்மீதுள்ள விசாரணை முடிவடைந்த பின்னரும் தீர்ப்புரை வழங்கப்படுவதற்கு முன்னரும், அந்த எதிரி எத்தகைய குற்றத்தை புரிந்தார் என்று நம்புவதற்கு ஏற்ற ஆதாரம் ஏதும் இல்லையென அந்த நீதிமன்றம்

கருதினுல் அந்த எதிரியை பிணையாளர் இன்றி ஒரு பிணை ஆவணத்தை இயற்றித்தருமாறு செய்து அவரை தீர்ப்புரையன்று நீதிமன்றத்திற்கு வருகைதர வேண்டுமென பணித்து விடுவிக்கலாம்.

# இந்திய சாட்சியச் சட்டம் 1872

# INDIAN EVIDENCE ACT, 1872

இச்சட்டம் 1872–ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியன்று அமுலுக்கு வந்தது. இச்சட்டம் ஜம்மு, காஷ்மீர் மாநிலங்கள் தவிர இந்தியா முழுவதும் நடைமுறையில் உள்ளது.

“100 குற்றவாளிகளை சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டாலும், ஒரு நிரபராதிகூட அநியாயமாக தண்டனை பெறக் கூடாது”.

## சாட்சியம் என்றால் என்ன?

ஒரு நீதிமன்றம் ஏற்கத்தக்க வாக்குமூலங்களும் ஆவணங்களும் சாட்சியமாகும்.

வாக்குமூலங்கள், சாட்சிகளால் வாய்மொழியாக அளிக்கப்படும்போது அவற்றை வாய்மொழி சாட்சியம் (oral evidence) என்று கூறப்படுகிறது. அப்பழுக்கற்ற உண்மையை உரைப்பதற்காக உறுதிமொழி கூறிய பின்னர் உரைக்கப்படுவதால் இந்த வாய்மொழி சாட்சியங்கள் நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஒரு நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படும் ஆவணங்கள் ஆவண சாட்சியமாகும். (Documentary Evidence) ஓர் ஆவணத்தில் பெயர் இடம்பெற்றவர் அல்லது அந்த ஆவணத்தை தன்வசத்தில் வைத்திருப்பவர், அத்தகைய ஆவணத்தை தன்னிச்சையாகவோ, அல்லது ஒரு நீதிமன்றத்தின் ஆணைக்கு இணங்கியோ, அதனை அந்த நீதிமன்றத்திற்கு முன்னால் சாட்சியமாக சமர்ப்பிக்கலாம்.

**எனவே சாட்சியம் இரண்டு வகைப்படும், அதாவது ,–**

1. வாய்மொழி சாட்சியம்
2. ஆவண சாட்சியம்

விசாரணையில் இருக்கும் ஒரு சங்கதியைப்பற்றி, ஒரு நீதிமன்றத்தின் முன்னர் அளிக்கத்தக்க வாய்மொழியாக உரைக்கத்தக்கவை அனைத்தும் வாய்மொழி சாட்சியமாகும். ஒரு நீதிமன்றத்தின் ஆய்வுக்கென தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் அனைத்தும் ஆவண சாட்சியமாகும்.

ஏதேனும் ஒரு பொருளை பதிவுசெய்யும் நோக்கத்துடன் பயன்படுத்துவதற்காக உள்ள அல்லது பயன் படுத்தக்கூடிய எழுத்துக்கள், எண்கள் அல்லது குறிகள் மூலமாக அல்லது அவற்றில் ஒன்றிற்கு மேற்பட்டவைகள் மூலமாக ஏதேனும் ஒரு பொருளின் மீது வரையப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட பொருளைக்குறிக்கும், எழுத்தில் இருப்பது ஓர் ஆவணமாகும். அச்சடிக்கப்பட்டவை, கள்ள அச்சு முறையில் தயாரிக்கப்பட்டவை அல்லது புகைப்படம் எடுக்கப்பட்ட சொற்களும் ஆவணமாகும்.

வரைபடமும், அமைப்புப்படமும் ஆவணங்களாகும், உலோகத்தகட்டின் மீதும், கல்லின் மீதும் பொறிக்கப்பட்டவைகளும் ஆவணங்களாகும். கேலி சித்திரமும் ஒரு ஆவணமே.

வாய்மொழி சாட்சியம், ஆவணங்களின் உள்ளடக்கத்தை தவிர மற்றவை அனைத்தும் வாய்மொழியாக சாட்சியம் அளிக்கப்படலாம். ஆனால் அழிக்கப்படும் வாய்மொழி சாட்சியம் நேரடியானதாக இருக்கவேண்டும்.

ஆவணங்களை முதல் தர இரண்டாம்தர, சாட்சியங்கள் மூலமாக மெய்ப்பிக்கலாம்.

முதல்தர சாட்சியம் (Primary evidence) என்பது ஒரு ஆவணத்தின் அசலை (மூலபத்திரம்) குறிக்கும். இரண்டாம் தர சாட்சியம் (Secondary evidence) அந்த அசல் ஆவணத்தின் உண்மையான நகலைக் குறிக்கும்.

பொதுவாக சாட்சியங்கள் ஆவணங்களின் மூலமே தாக்கல்செய்யப்பட வேண்டும் என்பது விதி. ஆனால் அப்படி செய்யமுடியாத, இக்கட்டான சூழ்நிலையில், அவற்றின் நகலை இரண்டாம்தர சாட்சியமாக பயன்படுத்தலாம்..

பிரிவு - 24

## Confession caused by Inducement Threat or Promise when Irrelevant in Criminal Proceding :

எந்த மீதுள்ள குற்றச்சாட்டு சம்மந்தாக அதிகாரத்தில் உள்ள ஒருவரால் செய்யப்படும் தூண்டுதல் அச்சுறுத்தல் அல்லது உறுதிமொழி காரணமாக அந்த எதிரியின் ஒப்புதல் உரை பெறப்பட்டிருப்பதாக ஒரு நீதி மன்றத்துக்கு தோன்றுவதுடன் அத்தகைய ஒப்புதல் உரையை கொடுப்பதால் எதிரியின் மீதுள்ள அந்த நடவடிக்கையில் அவருக்கு எதிர்பார்த்த அனுகூலம் எதையேனும் அவர் தவிர்க்கலாம் என்று அவர் நினைப்பதற்கு நியாயமானது என்று தோன்றும் ஆதாரங்களை அவருக்கு அளிப்பதற்கு அத்தகைய தூண்டுதல் அச்சுறுத்துதல் அல்லது உறுதிமொழி நீதிமன்றத்தின் கருத்தின்படி போதுமானதாக இருக்குமானால் எதிரியால் அப்படி கொடுக்கப்பட்ட ஒப்புதல் உரை குற்றவழக்கு நடவடிக்கையில் தொடர்புற்றதாகும்.

பிரிவு - 25

## Confession to Police Officer not to be Proved :

குற்றம் ஏதேனும் சுமத்தப்பட்ட ஒருவரால் ஒரு காவல் அலுவலரிடம் கொடுக்கப்படும் ஒப்புதல் உரை எதனையும் அவருக்கு எதிராக மெய்ப்பிக்கப்படலாகாது.

பிரிவு - 26

## Confession by Accused while in custody of Police not to be Proved Against him:

காவல் அலுவலர் ஒருவரின் காவலில் இருக்கும்போது ஒருவரால் கொடுக்கப்படும் ஒப்புதல் உரை எதனையும் அத்தகைய உரை நடுவர் ஒருவரின் நேரடி முன்னிலையில் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி அவருக்கு எதிராக மெய்ப்பிக்கப்படலாகாது.

**விளக்கம்:**

இந்தப் பிரிவில் நடுவர் என்பது நடுவருக்குரிய பணிகளை ஆற்றி வந்தாலும் 1973—ஆம் ஆண்டின் குற்ற விசாரணை முறைச் சட்டத்தின்படி நடுவர் ஒருவருக்குரிய அதிகாரங்களைச் செயல்படுத்துகின்ற ஒரு நடுவராக இருந்தாலன்றி கிராமத் தலைமை அலுவலரை உள்ளடக்காது.

பிரிவு - 27

## How much of Information Received from Accused may be Proved:

ஆனல் குற்றம் ஏதேனும் சுமத்தப்பட்டு ஒரு காவல் அலுவலரின் பாதுகாவலில் உள்ள ஒருவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் விளைவாக கண்டு பிடிக்கப்பட்ட சங்கதி எதையேனும் பற்றி சாட்சியம் அளிக்கப்படும் போது அத்தகைய தகவலின் எந்த அளவு அந்த தகவலின் மூலம்

கண்டுபிடிக்கப்பட்ட சங்கதிக்கு ஐயத்துக்கிடமின்றிச் சம்பந்தம் உடையதாக இருக்கின்றதோ அந்த அளவு தகவலை அது ஒப்புதல் உரையாக இருப்பினும் இல்லாவிடினும் மெய்ப்பிக்கப்படலாகும்.

## மரண வாக்குமூலம்

## DYING DECLARATION

பிரிவு - 32

மரணம் அடைந்தவர் கண்டுபிடிக்க முடியாதவர் சாட்சியம் கொடுக்கும் திறனற்றவர் வழக்கின் சூழ்நிலையை ஒட்டி நியாயமற்றவையென்று ஒரு நீதிமன்றம் கருதக்கூடிய செலவும் தாமதமும் இன்றி முயன்றும் வருகையைப்பெற முடியாதவர்கள் ஆகியோர் தொடர்புற்ற சங்கதிகளைப்பற்றி எழுத்து மூலமாக அல்லது வாய்மொழியாகச்செய்த உரைகளை தொடர்புற்ற சங்கதிகளாக கொள்ளத்தக்க சூழ்நிலைகளான, -

1. ஒருவருடைய மரணத்தின் காரணம் பிரச்சனையாக இருக்கும் சூழ்நிலைகளில் அவருடைய உரையானது அவரது மரணத்தின் காரணம்பற்றி அல்லது அவரது மரணம் விளைவிக்கப்பட்ட நடவடிக்கையின் சூழ்நிலைகளில் எதையேனும் பற்றி அவரால் அந்த உரை நிகழ்த்தப்பட்டிருக்கும்போது அத்தகைய உரையைச் செய்தவர் அப்படி செய்யும்போது எதிர் நோக்கி இருந்தாலும் இல்லாவிடினும் அவருடைய மரணத்துக்கான காரணத்தைப் பற்றிய பிரச்சனை எழுப்பப்பட்டுள்ள நடவடிக்கை எத்தகையதாக இருப்பினும் அந்த உரைகள் தொடர்புற்றவையாகும்;

2. அந்த உரை அத்தகையவரால் நமது சாதாரண நடப்பு முறையில் செய்யப்பட்டு இருந்தாலும் அல்லது அத்தகைய அலுவல் நடப்பு முறையில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களில் அவரது தொழிலை ஆற்றும் வகையில் செய்யப்பட்ட ஒரு பதிவில் அல்லது குறிப்பில் வைக்கப்பட்டிருந்தாலும் அல்லது பணம், சரக்கு, கடன் ஈட்டுப்பத்திரங்கள் அல்லது எந்தவகையான சொத்தையும் பெற்றுக்கொள்வதற்காக அவரால் எழுதப்பட்ட அல்லது ஒட்டப்பட்ட ஓர் ஒப்புதல் குறிப்பில் இருக்கும் போதும் அல்லது அவரால் எழுதப்பட்டதும், ஒப்பிடப்பட்டதுமான ஒரு பத்திரத்தில் அந்த உரை அடங்கி இருக்கும்போதும் அல்லது வழக்கமாக அவரால் தேதியிடப்பட்ட, எழுதப்பட்ட அல்லது ஒப்படப் பட்ட கடிதம் அல்லது வேறு பத்திரத்தின் தேதி விவரத்தில் அந்த உரை அடங்கியிருக்கும் போதும்;

3. அந்த உரையானது அதை செய்கின்றவரின் பணம் சம்பந்தப்பட்ட உரிமைக்கு அல்லது உடமை சம்பந்தப்பட்ட உரிமைக்கு விரோதமாக இருக்கும் போதும் அல்லது அந்த உரை உண்மையாக இருப்பின் அது அவரது ஒரு குற்ற வழக்குக்கோ அல்லது இழப்பீட்டுக்கான உரிமை வழக்குக்கோ ஆளாக்கியருக்கக்கூடும் என்ற போதும்;

4. எந்த பொது உரிமை வழக்கும் அல்லது சமுதாயம் அக்கறை கொண்டுள்ள அல்லது பொதுமக்கள் அக்கறை கொண்டுள்ள விஷயம் உண்மையாக இருந்தால் அத்தகையவர் அதனை அறிந்திருக்கக் கூடியஅந்த உரிமை வழக்கம் அல்லது விஷயம் பற்றிய அவருடைய கருத்து அந்த உரையில் அடங்கியிருந்து அந்த உரிமை வழக்கம் அல்லது விஷயம் சம்பந்தமாக எத்தகைய கருத்து மாறுபாடும் தோன்றுவதற்கு முன்னர் அந்த உரை செய்யப்பட்ட போதும்;

5. திருமணம், தத்து அல்லது இரத்த சம்பந்தப்பட்ட உறவை நிர்ணயிக்கத்தக்கதாக அந்த உரை இருக்கும்போது திருமணம், தத்து அல்லது இரத்த சம்பந்தத்தால் அவர்களுக்கிடையே இருக்கும் உறவை அறிந்துக் கொள்வதற்கு அந்த உரையை செய்பவருக்கு சிறப்பான வாய்ப்பு இருந்து அந்த உரையைப் பற்றிய கருத்து மாறுபாடு தோன்றுவதற்கு முன்னரே அந்த உரை செய்யப்பட்டிருக்கும்போதும்;

6. அந்த உரை திருமணம், தத்து அல்லது இரத்த சமபந்தத்தால் இறந்தவர்களுக்கிடையே நிலவிய உறவை நிலை நாட்டுவதாக இருக்கும்போது இறந்தவர்களின் குடும்ப செயல்கள் பற்றிய ஆவணத்தில் அல்லது உயிலில் செய்யப்பட்ட போதும் அல்லது குடும்பக்கொடி வழியில் கல்லறைக் கல்லில் குடும்ப உருவப்படத்தில் அல்லது அத்தகைய உரைகள் வழக்கமாக எழுதப்படும் வேறு பொருளில் அந்த உரை செய்யப்பட்டிருந்தாலும் அந்த பிரச்சனை பற்றிய முரண்பாடு எதுவும் தோன்றுவதற்கு முன்னரே அந்த உரை செய்யப்பட்டபோதும் ;

7. அந்த உரையானது 12-வது பிரிவின் (அ) கூறில் கூறப்பட்டுள்ள நடவடிக்கை எதற்கேனும், சம்பந்தப்பட்ட நடவடிக்கை எதற்கேனும், தொடர்புள்ள ஆவணம், உயில் அல்லது வேறு பத்திரம் எதிலேனும் அடங்கியிருக்கும் போதும் ;

8. அந்த உரையானது பற்பல நபர்களால் செய்யப்படும் பிரச்சனையில் உள்ள செய்திக்குத் தொடர்புற்ற அவர்களுடைய உணர்ச்சிகளை அல்லது மனதில்பட்டவற்றை வெளியிடும்போதும்.

* * *